# தேர்ந்தெடுத்தல் குறித்த கேள்விகள்
# Election Related Questions

## 1. மூப்பர்கள் - சபையில் அதிகாரம் (Re Authority in Church).

**கேள்வி (1909)-3** - ஒரு மூப்பர் சபைக்கு உத்தரவிடுவதற்கும், கூட்டங்களைத் தலைமைத் தாங்குவதற்கும் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படுகின்றாரா? அல்லது அவருக்கு இன்னும் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றதா?

**பதில்:** அதிகாரத்தை அருளுபவரைக் காட்டிலும், அதிகாரம் மூப்பருக்கு அதிகமாய் இருக்க முடியாது. இன்னும் வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், ஒருவேளை சபையார், ஒருவரை தேர்ந்தெடுப்பதின் மூலம் அவரிடம் மூப்பருக்குரிய பொறுப்பை அளிப்பார்களானால், நாம் தெரிந்துகொள்ள வேண்டியது முதலில் சபையிடமே அந்த பொறுப்பு இருந்தது என்பதாகும். இல்லையேல் சபையானது அப்பொறுப்பினை மூப்பருக்கு அளித்திருக்க முடியாது. ஆகவே, சபையார் அனுமதியளிக்கும் அதிகாரத்தையே அந்த மூப்பர் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை அவருடைய மனசாட்சியானது, சில குறிப்பிட்ட விஷயங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கவில்லையெனில், சபையாரிடம் தனது மனநிலையைப் பற்றி எடுத்து விவரித்துக் கூறுவதும் மற்றும் ஒருவேளை அவர்கள் விரும்பும் பட்சத்தில் இப்பணியிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளும்படிக்கு தன்னிடம் கூறலாம் என்றும், தானும் மகிழ்ச்சியோடு விலகிப்போவேன் என்றும் கூறுவதும் நேர்த்தியான காரியமாக இருக்கும். சபையாருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் மூப்பர் தனது மனசாட்சியை மீறி செயல்படக்கூடாது. மேலும், அந்த மூப்பர் தங்களுக்கு ஊழியம் புரியும் விஷயத்தில் சபையாருங்கூட தங்களது மனசாட்சியை மீறி செயல்படவும் வேண்டாம். சபையாரின் விருப்பங்களுக்கு இசைவாக, அதிலும் அவருடைய மனசாட்சி அவரை தடை செய்யாத எல்லை வரையிலும், மூப்பர் சபையாருக்கு ஊழியம் புரிய வேண்டும்.

இன்னுமாக, கரங்களைத் தூக்குவதன் மூலம் மூப்பர், மேற்பார்வையாளராக (overseer) பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்படுகின்றார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுவதை நான் தெரிவிக்கின்றேன்; இவ்விதமாக, இது சபையில் செயல்முறைப்படுத்தப்படுகின்றது. மேலும், சபையாரின் மூலமாகவே முதலாவதாக இது இயக்கவும்படுகின்றது.

## 2. மூப்பர்கள் - சபையின் நலன்கள் கருதி பேசுவதற்குக் கூட்டம் நடத்துதல்.

**கேள்வி (1910)-1** - ஒவ்வொரு சபையிலும் அல்லது பல்வேறு சபையிலும் உள்ள மூப்பர்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள சபைகளின் நலன்கருதி ஆலோசிப்பதற்கு/பேசுவதற்கு ஒன்று கூடுவது சரியான காரியமாக இருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? மேலும், இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றனவா?

**பதில்** - இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன என நான் எண்ணுகின்றேன். மேலும், இது பரிந்துரைக்கப்பட வேண்டியது என்றும் நான் எண்ணுகின்றேன். அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களை ஒன்றுகூட அழைத்தது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிக்கும்படிக்கு அவர் மூப்பர்களை ஒன்றுகூடும்படி அழைத்தார். அவர் ஒரு மூப்பனாக அல்லது பாஸ்டருக்கான பொறுப்பை உடையவராய் இருந்து, சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களை அங்கே அவர்களோடு கலந்து பேசிக்கொண்டிருந்தார். ஒருவேளை, சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள்பற்றி கலந்து பேச மூப்பர்கள் ஒன்றுகூடுவது தவறாக இருக்குமாயின், என்னுடைய கணிப்பின்படி இப்படியானதொரு கூட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நடத்தினதும் தவறாய் இருந்திருக்கும். சபையாரின் நலன்கருதி கலந்து ஆலோசிப்பதற்கு மூப்பர்கள் ஒன்றுகூடுவது சரியென்று கருதுவதே பாதுகாப்பான கோட்பாடாக இருக்கும் என நான் எண்ணுகின்றேன். ஆனாலும், ஒரு விஷயத்தைக் குறித்து நான் உங்களை எச்சரிக்க வேண்டும். சபையை நடத்துவதற்கான கருத்து தெரிவிப்பதற்கு அல்லது சபையை நடத்துவதற்கான முடிவு எடுப்பது தொடர்பானவிதத்தில் ஒருவேளை மூப்பர்கள்

ஒன்று கூடுவார்களானால், அது கெடுதலான காரியமாக இருக்கும் என்றே நான் எண்ணுகின்றேன், இது வேறொரு விஷயமாகும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களைக் குறித்துச் சிந்திப்பதற்கு ஒன்றுகூடுவதும், சபையை நடத்துவதற்கான பொறுப்பேற்கும் விஷயமும், இரு வேறுபட்ட காரியங்களாகும். மூப்பர்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பு வருகின்றது என வைத்துக்கொள்ளுங்கள், மேலும், மூப்பர்களின் கணிப்பின்படி சபையாருக்கு நலமாயிருக்கும் ஏதோ ஒரு காரியத்தை அவர்கள் மனதில் வைத்திருக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம். நலனுக்கடுத்தக் காரியமாகப் பரிந்துரைக்கப்படும் இக்காரியத்தை சபையார் முழுமையாக புரிந்துகொண்டு வாக்கெடுப்பின் (vote) மூலம், மூப்பர்களிடம் விசேஷமாக ஒப்படைக்கும் பட்சத்தில் இதைச் சரியென்று நான் எண்ணுகின்றேன் - ஒருவேளை சந்தேகம் அல்லது கேள்விகள் எழும்புவதற்கு ஏதுவான புதிதான திட்டமாக இருக்கும்பட்சத்தில், இந்த மூப்பர்கள் அக்காரியத்தைச் சபையார் முன் வைப்பது அதாவது, "நாங்கள் சபையாரின் நலன்கருதி, இப்படிப்பட்ட ஒரு கருத்தை மனதில் கொண்டுள்ளோம், இப்பொழுது அதை உங்கள் முன் வைத்து இதற்கான உங்கள் வாக்கை (vote) கேட்கின்றோம்" என பரிந்துரைப்பது சரியான மற்றும் நேர்த்தியுமான வழிமுறையாகக் காணப்படும். இதுவே, பாதுகாப்பான திட்டமாக இருக்கும். மிகச் சிறந்த நோக்கங்களையும், மிக நல்ல யோசனைகளையும் உடைய மிகச் சிறந்த சகோதரர்களில் சிலர், சபையாரிடம் கலந்து ஆலோசிக்காமலேயே அந்த ஆலோசனைகளைச் செயல்படுத்த முற்படுகையில், எதிர்ப்பான பலன் அடைந்துள்ளதை நான் பார்த்திருக்கின்றேன். அதாவது, நீங்கள் நாயினுடைய மயிரை எதிர்திசையில் கோதிவிட முயற்சிப்பீர்களாகில், அப்படிச் செய்வது மென்மையாக இருக்காததால், நாய்க்கு அது பிடிக்காது. இதுபோலவே சபையாரும் இப்படியாகச் செயல்படுவதை விரும்புவதில்லை. ஏனெனில், இப்படிச் செய்வது அவர்களை ஆளுவது போன்றும் இன்னுமாக தாங்கள் விசேஷமாக அதிகாரம்/அங்கீகாரம் கொடுக்காத ஒன்றை செய்வதுபோலும் அவர்களுக்கு தோன்றுவதினாலாகும். ஒருவேளை நீங்கள் நாயின் மயிரை கோதிவிட வேண்டுமானால் மயிர் வளர்கின்ற திசையில் அதற்கு கோதிவிடுவது எப்போதும் ஞானமான காரியமாய் இருக்கும் என்பதே என்னுடைய கருத்தாகும். அதுபோல, நீங்கள் சபையாரை ஒருவேளை கையாள வேண்டுமெனில், மனித சுபாவம் ஒரு குறிப்பிட்ட நடைமுறையைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொண்டு, அந்நடைமுறைக்கு இசைவாகவே நடக்க முயற்சியுங்கள். மேலும், தேவைக்கு மிஞ்சி மனித சுபாவத்தைச் சிலிர்க்க வைக்க வேண்டாம்/சினமூட்ட/கிளர்ச்சியூட்ட வைக்க வேண்டாம். சபையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மனித சுபாவம் உள்ளது; அவனுக்கு அழியக்கூடிய சரீரமுள்ளது, மேலும், இச்சரீரத்தில் கொஞ்சம் அல்லது மிகுதியான சண்டை மனப்பான்மை/போரிடும் மனப்பான்மையும் தான் அலட்சியம் பண்ணப்படக்கூடாது எனும் விருப்பத்தை கொஞ்சமாகவோ அல்லது மிகுதியாகவோ கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள்; சத்தியத்தில் இருக்கும் அனைவரிடமும் விசேஷமாக, அதிக அளவில் இக்குணங்கள் காணப்படுவதை உங்களால் பார்க்க முடியும். இவர்கள் ஆற்றல்மிக்க குணநலன்கள் கொண்டிருக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் ஒருபோதும் ஜெயங்கொண்டவர்களாக ஆக முடியாது. மேலும், இந்த பண்புதான் இன்று அவர்கள் காணப்படும் நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. மேலும், அவர்கள் பாபிலோனிலிருந்து வெளியேறுவதற்கும் அவர்களுக்கு உதவிற்று, மேலும், இந்த ஒரு பண்புதான் கொஞ்சம் வாதாடவும், சிலசமயம் கொஞ்சம் சண்டைபோடவும்/போரடவும் விரும்புகின்றது. மாறாக, ஒருவேளை நாம் பின்வருமாறு கூறினால் அதாவது, இப்பொழுது நாம் ஒரு புதிய திட்டம்/காரியம் வைத்திருக்கின்றோம். ஆனால், அதற்கு வாக்குகள் (vote) இன்னமும் பெறப்படவில்லை. ஆனால், சபையார் இதை விரும்புவார்கள் என்று எங்களுக்கு நிச்சயம் உள்ளது, ஆனால், அதை சபையார் முன் வைத்து, அதற்காகப் பரிந்துரைப்போம் என்று சொல்வோமானால், இப்பொழுது சபையார் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

### 3. மூப்பர்கள் - தலைமை மூப்பரின் வேலை (Work of Presiding Elder).

**கேள்வி (1913)-1** - தலைமை மூப்பரின் வேலை என்ன?

**பதில்** - தலைமை மூப்பருக்கான பணி குறித்து வேதாகமத்தில் விவரிக்கப்படவில்லை. தலைமை மூப்பர் என்ற ஒன்று வேதவாக்கியங்களில் குறிப்பிடப்படவே இல்லை.

## 4. மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றார்கள்?

**கேள்வி (1916 z)-1-** ஏன் மூப்பர்கள் கவனமாய் தெரிந்தெடுக்கப்படுகின்றார்கள்?

**பதில்** - ஏனெனில், ஊழியம் புரிவதற்கான ஆவி, கிறிஸ்துவின் சபையினுடைய மூப்பர்களின் அல்லது உதவிக்காரர்களின் ஆவியாக மாத்திரம் இராமல், சபையின் ஒவ்வொரு அங்கத்தினருடைய ஆவியாகவும் கூட இருக்கின்றது; காரணம், நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபையைக் குறித்த செய்தியை எழுதும் விஷயத்தில் ஊழியக்காரனாகவோ அல்லது வேலைக்காரனாகவோ இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம்.

ஆனால், நம்முடைய சொந்த இருதயங்களிலேயே, ஏற்கனவே எழுதப்படாத விஷயங்களை நாம் மற்றவருடைய இருதயங்களில் எப்படி எழுத வேண்டும் என்பதை அறியாமல் இருப்போம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எனவேதான், மூப்பர்களைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் - ஏற்கனவே தங்களுடைய இருதயங்களில் கர்த்தருடைய காரியங்களை எழுதப்பெற்றவர்கள் மற்றும் இதன் காரணமாக வளர்ந்துவரும் சகோதர சகோதரிகளுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலினால் கர்த்தருக்கு ஒத்த குணலட்சணங்களை எழுதுவதற்குத் தகுதியுள்ள உதவியாளர்களாக இருக்கக்கூடியவர்களைக் கண்டுபிடிப்பதில் மிகவும் கவனமாய் இருப்பதில் தவறாமல் இருக்க வேண்டும்.

என்ன செய்தி, என்ன நிருபம், நம்முடைய இருதயங்களில் பல்வேறு பிரதிநிதிகள் மூலம் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட வேண்டியுள்ளது? அது காலக்கணக்குப்பற்றின அறிவா?/சத்தியமா? அது நிழல்கள் குறித்த தெளிவான காரியங்களா? அது பல்வேறு விதங்களில் புரிந்துகொள்ளப்பட்டுள்ள வேதவாக்கியப் பதிவுகள் தொடர்பான விஷயத்தில் கடினமான இறையியல் கோட்பாடுகளை உடைக்கும் காரியமா? அது யூதர்களின் வரலாறு, உலகத்தின் வரலாறு, சபையின் வரலாறு குறித்த அறிவா? அது கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வரவிருக்கின்ற காலத்தில் இருக்கும் பல்வேறு உடன்படிக்கைகள் குறித்த புரிந்துகொள்ளுதல் மற்றும் உணர்ந்துகொள்ளுதலா? இல்லை, அது இவைகளில் ஒன்றுமேயில்லை. ஆண்டவருடைய பண்பு இயல்புகளை நம்முடைய இருதயதங்களில் ஆழமாக பதியப் பெற்றிருப்போமாகில், "நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு நிறைவாக அருளப்படும்" - (2 பேதுரு 1:8,11).

இந்த அனைத்து பாடங்களும் ஏறக்குறைய முக்கியத்துவம் வாய்ந்தவைகள்தான். மேலும், இப்பாடங்கள், கர்த்தர் தம்முடைய ஜனங்களுடைய இருதயங்களில் எழுதப்பட வேண்டியவைகளுக்குத் தொடர்பாக ஏறக்குறைய பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், கிறிஸ்துவின் நிருபத்தை எழுதுவது என்பது - ஆண்டவருடைய ஜனங்களின் இருதயங்களில் அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த தடத்தைப் பதிப்பது, எழுதுவது என்பது - அதாவது, அவருடைய சாந்தம், அவருடைய நற்பண்புகள், அவருடைய பொறுமை, அவருடைய நீடிய பொறுமை, அவருடைய சகோதர சிநேகம், அவருடைய அன்பு, அவருடைய சந்தோஷம், அவருடைய சமாதானம் குறித்து எழுதுவது என்பது வித்தியாசமானக் காரியமாகும்.

காலக்கணக்கு மற்றும் வரலாறு தொடர்பான அறிவை நாம் அனைவரும் பெற்றிருக்கலாம். வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தையும் நம்மால் மேற்கோளிட்டுக் கூறமுடியலாம், மற்றும் வசனம் எங்குள்ளது என்றும்கூட கூறமுடியலாம். ஆனாலும், கிறிஸ்துவின் நிருபத்தை நம்முடைய இருதயங்களில் எழுதப்பெறாமலும்கூட இருக்கலாம். இந்த நிருபத்தைக் குறித்துதான் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் (சோம்பேறி, பயனற்றவர்) கனியற்றவர்களுமாய் இருக்க வொட்டாது" என்று கூறியுள்ளார். ஏனெனில், (அறிவானது அதற்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்ளும்).

**5. தேர்ந்தெடுத்தல் (election) - சபையில் பெண் போதகர்கள்.**

**கேள்வி (1905)-2** – அலிகெனியில் (Allegheny) உள்ள சபையில் ஸ்திரீகள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களா என்பதை எனக்கு தயவுகூர்ந்து தெரிவிக்கவும்? ஒருவேளை இல்லையெனில் ஏன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது? ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றதே.

**பதில்** - இல்லை, இப்படியாக நடந்ததில்லை. அலிகெனியிலுள்ள சபையில் எந்த சகோதரிகளும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கர்த்தர், சகோதரிகளை அப்போஸ்தலர்களாகவோ அல்லது எழுபது சீஷர்களாகவோ தேர்ந்தெடுக்கவில்லை. மேலும், இயேசு, சகோதரிகளை நேசித்தார். அவர் மார்த்தாளையும், மரியாளையும் நேசித்தார். அவர்களுடைய சகோதரனாகிய லாசருவையும் நேசித்தார். கர்த்தர் ஒருபோதும் சகோதரிகளை சபையில் செய்தியாளர்களாக (speakers) நியமிக்கவில்லை. மேலும், இதற்கு மாறாக வித்தியாசமாய்ப் பேசுவதற்கு நமக்கு அதிகாரமும் இல்லை. கர்த்தருடைய திட்டம் சிறப்பானதென நான் எப்போதும் எண்ணுகின்றேன். இங்குள்ள சபையை நடத்துவதற்கான கர்த்தருடைய திறமையை நான் சந்தேகிக்க ஆரம்பிப்பேனாகில், பரலோகத்தை நடத்துவதற்கான அவருடைய திறமையையும் நான் சந்தேகிப்பவனாகிவிடுவேன். அவருடைய வழியிலேயே நாம் நடக்க வேண்டும். மாறாக, நமக்குரிய சொந்த வழியைத் தெரிந்துகொண்டு, கர்த்தரை, நம்முடைய வழியில் நடக்க வரும்படி கேட்கக்கூடாது.

**6. தேர்ந்தெடுத்தல் (election) - (அவைத்தலைவர்) (Re Chairman)**

**கேள்வி (1909)-1** - மூன்று முதல் ஏழு மூப்பர்கள் இருக்கும் ஒரு சபையில் அதிக வேலைகள் குவிந்து காணப்படும் தருணங்களில் மூப்பர்களுக்கான chairman தேர்ந்தெடுக்காமல் இருக்கலாம் என்பதற்கு ஆதரவான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்கள் ஏதேனும் உள்ளதா?

**பதில்** - இல்லை. உண்மை என்னவெனில், ஒழுங்கு காணப்பட வேண்டும். யார் chairman ஆக இருக்க வேண்டும் என்பதை சபையார் தீர்மானிக்காத பட்சத்தில் மூப்பர்கள் தாங்களே chairman – னை தெரிவு செய்து கொள்ளலாம்.

**7. தேர்ந்தெடுத்தல் (election) - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள்.**

**கேள்வி (1909)-2** - மூப்பர்கள் மற்றும் உதவியாளர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகளைக் கூறவும்.

**பதில்** - ஆறாம் தொகுதியை (volume) பார்க்கவும். அதில், இப்பாடம் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்கள் உள்ளன. தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்னரே தலைவர் (leader) இவ்விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவந்து, அனைவரும் இக்காரியத்தை முழுமையாய் மனதில் புரிந்துகொள்ளத்தக்கதாக ஆறாம் தொகுதியில் காணப்படும் இக்காரியங்களை வாசிக்கும்படி யோசனை தெரிவிப்பது நல்லது என்று நான் எண்ணுகின்றேன்.

**8. தேர்ந்தெடுத்தல் (election) - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை.**

**கேள்வி (1910)-3** - நாங்கள் சபையாராக ஆறாம் தொகுதியின் காரியங்களின்படி தேர்ந்தெடுத்தல் செய்ய முற்பட்டுள்ளோம். ஆனால், எங்கள் அனைவராலும் ஒன்றுபோல் புரிந்துகொள்ள முடியவில்லை. மூப்பர்களுக்குத் தகுதியுள்ள அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது போல் ஓரிடத்திலும், வேறொரு இடத்தில் சபையின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது போலவும் காணப்படுகின்றது.

எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, மேலும், அதைக் குறித்து உங்களுக்கு நாங்கள் எழுதினோம். மேலும், ஏன் பிரச்சனை எழும்பினது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்தீர்கள்? சிலர் புரிந்துகொண்டவிதமே பிரச்சனையாகும். சபையில் மூப்பருக்கான சமநிலை தகுதியுடன் ஆறு பேர் அதாவது, அனைவரையும் நாம் தேர்ந்தெடுக்கத்தக்கதாக இருக்கின்றார்கள் என வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பன்னிரண்டாக அல்லது இரண்டாகக் காணப்படுமாயின் சபையாரின் எண்ணிக்கையைப் பொருத்து மாத்திரம் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணத்திற்கு, ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பத்து என்றால், நாம் ஒரு மூப்பரைத் தேர்ந்தெடுக்கலாம். ஒருவேளை, சபையாரின் எண்ணிக்கை இருபத்தைந்து என்றால், நாம் இருவரைத் தேர்ந்தெடுக்கலாம். இப்படியாகப் புரிந்துள்ளனர்.

**பதில்** - மூப்பர்கள் தேர்ந்தெடுக்கும் இவ்விஷயத்தைக் குறித்து என்ன சொல்லலாம்? மூப்பருக்கான தகுதிகளுடைய அனைவரும் தேர்ந்தெடுக்கப்படலாமா அல்லது சபையாரின் எண்ணிக்கையில் பத்து சதவிகிதம் என்று வைத்துக்கொள்ளும்படி மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படலாமா? ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்து சதவிகிதம் என்பது ஐந்து போராக இருக்கும். மேலும், ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்து சதவிகிதம் என்பது பத்து பேராக இருக்கும். என்னுடைய பதில் இதுவே: நான் புரிந்துகொண்ட வரையிலும், மூப்பருக்கான தகுதிகளை வெளிப்படுத்தும் அனைவரும் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆகவே, ஒருவேளை ஆறு எண்ணிக்கையைக் கொண்டுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பர்களாகப் பணிபுரிய சமநிலையான தகுதியுடையவர்களாக இருப்பார்களானால், நான் அவர்கள் ஆறு பேரையும் தேர்ந்தெடுப்பேன். பின்னர் அவர்கள் பணிபுரிவதற்கு வரிசை முறையில் செயல்படும்போது, வெளியே செல்வதற்கும் வேறு இடங்களில் கூடுகைகள் நடத்துவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும் - அதிகமான மூப்பர்கள் இருக்கும் இடம் சிறப்பாய் இருக்கும்! ஆனால், ஆறு பேர் எண்ணிக்கையுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பருக்கான தகுதியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது என்று நான் எண்ணுகின்றேன். ஆனால், ஒருவேளை ஆறு பேர் இருப்பார்களானால், அதிலும் ஆறு பேரும் ஊழியம் புரிய தகுதியுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆறு பேரும் ஊழியம் புரிவதையே நான் விரும்புகின்றேன். பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், போதிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்திருக்கின்றேன். நமது கர்த்தர் இயேசு குறித்த தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் - கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இப்பொழுது யாரெல்லாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கின்றார்களோ, அவர்கள் போதிப்பதற்கென பிதாவிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கின்றனர். இதற்காகவே அபிஷேகம் கொடுக்கப்பட்டுள்ளது. அபிஷேகம் அருளப்படுவதே போதகம் பண்ணுவதற்கென அவர் கொடுத்த அதிகாரமாகும். பின்னர், ஒருவேளை அவனுக்கு நல்ல குரல் வளம் இருக்கின்றது என்றால், அதுவும் நல்லதுதான். ஒருவேளை அவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கின்றது என்றால் அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை இவைகளுக்கு இசைவாக அவனிடத்தில் இன்னும் வேறே விஷயங்கள் இருக்குமாயின் இவைகள் அனைத்தும் அவனுக்கு உதவியாக இருக்கும். மேலும், அவனுடைய தாலந்திற்கேற்ப போதகம் பண்ண அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது சகோதரிகளின் விஷயத்தில் பார்க்கும்போது சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு சகோதரி பொதுவிடங்களில்/பொதுப்படையாகப் போதிக்கக்கூடாது. ஆயினும், போதிப்பதற்கான மற்ற பல்வேறு வழிகள் ஒரு சகோதரிக்கு உண்டு. நற்செய்தியை அறிவிப்பதற்கும் உதவிகரமாய் இருப்பதற்குமான அநேக வாய்ப்புகள் அவளுக்கு இருக்கின்றன. (மேடைகளில் நிற்பவர்களுக்கு மாத்திரம் பிரசங்கம் பண்ணுவதற்கான வாய்ப்பு இல்லை). நாம் அனைவரும் பிரசங்கிக்க முடியும் - நம்முடைய அன்றாட ஜீவியத்தின் வாயிலாக. ஏனெனில், நாம் அவனைவரும் பிரசங்கிமார்களாய் இருக்கின்றோம் - அனைவரும் பிரசங்கிக்கின்றார்கள் என நான் நம்புகின்றேன்.

ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார், உங்களிடம் எத்தனை பிரசங்கிமார்கள் இருக்கின்றார்? இருபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நம்மிடத்தில் இருக்கின்றார்கள் என்று நான் கூறினேன். ஆச்சரியமாயிருக்கே! என்றார் அவர். சகோதரரே, நீர் தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பிரசங்கம் பண்ணும்படி அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர். சிலசமயம் நாங்கள் பொதுவிடங்களில்/பொதுப்படையாகப் பிரசங்கிப்போம். மற்றும் சிலசமயம் அந்தரங்கத்தில்/தனிப்பட்டவிதத்தில் பண்ணுவோம். சிலசமயம் நாங்கள் ஒரு நபருக்கு மாத்திரமே பிரசங்கம் பண்ணுவோம். மேலும், சிலசமயம் இருநூறு பேர் கொண்ட சபையாருக்குப் பிரசங்கம் பண்ணுவோம். மேலும், சிலசமயம் பத்தாயிரம் பேர் கொண்ட சபையாருக்கும் பிரசங்கம் பண்ணுவோம்.

## 9. தேர்ந்தெடுத்தல் (election) - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுகின்றது.

**கேள்வி (1910)-1** - பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சபையார் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றார்கள் என்று நாம் புரிந்துள்ளோம். நாங்கள் ஒரு சகோதரனை எங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிவதற்கென தேர்ந்தெடுத்த பின்னர், நாங்கள் அவரைக்குறித்து கருதினவைகளுக்கு ஏற்ப அவர் இல்லை என்று பின் நாட்களில் கண்டுபிடிக்கும்போது, அது சபையாரின் தவறு என்றா? அல்லது கர்த்தருடைய தவறு என்றா? நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

**பதில்** - யாரிடத்தில் தவறு உள்ளது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. சபையார் போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதே தெரிகின்றது. சபையார் யாரையாவது மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாகவே அவரைக் குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். நூதன சீஷனை (சபையில் புதிதாக சேர்ந்த ஒருவரை) தேர்ந்தெடுக்கக்கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். ஒரு நூதன சீஷனை தேர்ந்தெடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. ஒருவேளை இப்படி செய்திருப்பீரானால், இப்பிரச்சனைகள் உமக்கு வேண்டியதே. ஒருவேளை குறிப்பிட்டக் காலம் ஒரு நூதன சீஷனை மூப்பராகப் பெற்றிருப்பதின் காரணமாக நீர் நல்ல படிப்பினையையும் பெற்றுக்கொள்வீர். மேலும், ஒருவேளை சபையிலுள்ள நண்பர்கள் இப்படியானதொரு காரியத்தைச் செய்திருப்பார்களானால், அநேகமாக இது முடிவில் நன்மையாகக் காணப்படும். மற்றும் அவர்களும் அடுத்தமுறை மிகவும் கவனமாகக் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால், இவ்விதத்தின் மூலம் அவர்கள் படிப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக கர்த்தர் அனுமதிக்கும் காரியமானது, கர்த்தரும் அறியாமல் செய்துவிட்டார் என்பதைக் குறிக்காமல், மாறாக, தமது கட்டளையைப் பின்பற்றாமல், ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுத்தற்காக வருங்காரியங்களை அவர்கள் அனுபவிக்க தக்கதாக அவர் அனுமதித்துவிட்டார். நூதன சீஷன் என்பவன் சபையின் விஷயங்களில் புதிதானவன் ஆவான். மேலும், ஒருவேளை அவன் இவ்விஷயங்களில், புதிதாய் இருப்பவனானால், இதைக் குறித்து சபையார் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள். ஏனெனில், அவனுக்காக வாக்களிப்பதற்கு (vote) முன்னதாகவே அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவர்கள் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள்.

## 10. தேர்ந்தெடுத்தல் - அவைத்தலைவி (chair-woman) நியமித்தல்.

**கேள்வி (1910) - 2** - தேர்தல் நடைபெறும்போது, தேர்தலை நடத்தித்தருமாறு எவரையேனும் அவைத்தலைவராக வைக்க ஒரு மூப்பர் விரும்பினார் என்றால், ஒரு சகோதரியை இந்நோக்கத்திற்காக அந்த ஸ்தானத்தில் நிறுத்துவது முறையாக இருக்குமா?

**பதில்** - சபையில் சில தவறான புரிந்துகொள்ளுதல் காணப்பட்டு, மேலும், அங்கு சகோதரன் அல்லது சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கும் ஒருநிலை காணப்பட்டாலொழிய, மற்றபடி ஒரு சகோதரியை நியமனம் செய்யமாட்டேன் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியான, மிக விநோதமான சூழ்நிலைகள் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே, தேர்தல் கூட்டத்தில் ஒரு சகோதரியை அவைத்தலைவராக (chairman) செயல்படக் கேட்பதற்கு நான் இணங்குவேன்.

இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலை ஒருபோதும் வராது என்று நான் கூறமாட்டேன். ஆயினும், அது அபூர்வமாய் சம்பவிக்கும் சம்பவமாகத்தான் இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

## 11. தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும், நீதிமான்களாக ஆக்கப்பட்டவர்களும் வாக்குகள் (vote) அளிக்கலாமா?

**கேள்வி (1910)-1** - சபையில் நடக்கும் தேர்தலில் எப்போதும் அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே வாக்குகள் (vote) செலுத்தலாமா? அல்லது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளும்கூட வாக்குகள் (vote) செலுத்தலாமா?

**பதில்** - கொஞ்சம் முன்புதான் இதைக் குறித்து நாம் பேசினோம். வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்பு, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே, சபை தொடர்பான எக்கேள்விகளுக்கும் அனைத்து தருணங்களிலும் வாக்குகள் (vote) செலுத்த உரிமை உடையவர்கள் என்பது தெளிவாய் அறிவிக்கப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஏனெனில், மற்றவர்கள் எவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்அங்கங்கள் அல்ல. ஒருவேளை, எவ்விடத்தில் கூடுகை நடத்தலாம் என்பது தொடர்பான சில கேள்விகளை சபையார் கேட்க விரும்புவது என்பது வேறுபட்ட காரியமாகும். இவ்விஷயம் தொடர்பாக கேள்வி கேட்கப்படும்போது, நீங்கள் இப்படியாகக் கூறலாம், அதாவது, கூடுகைக்கான இந்த இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் கூடுகையை நடத்தலாமென நாம் எண்ணுகின்றோம். மேலும், நாம் அனைத்து நண்பர்களிடமும் கேட்போம் - அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களிடம் மாத்திரம் கேட்கமாட்டோம். ஏனெனில், இவ்விஷயத்தில் அனைவரும் விருப்பம் கொண்டுள்ளனர் - முழு விசுவாச வீட்டாரிடமும் நேரம் மற்றும் இடம் குறித்து தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்வோம். ஆனால், சபைக்கான ஊழியர்கள் தேர்ந்தெடுப்பது தொடர்பான எவ்விதமான கேள்வி அல்லது இவ்விஷயம் தொடர்பான எந்த கேள்வியும் அர்ப்பணம் பண்ணினவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்.

## 12. தேர்ந்தெடுத்தல் (election) - தொகுதிகள் (volumes) விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் (vote).

**கேள்வி (1910)-2** - ஒரு நகரத்தில் குறிப்பிட்ட சில காலம் தொகுதிகள் விநியோகிப்பவர்களாக (colporteurs) காணப்பட்டு, அந்நகரத்திலுள்ள சபைக்குச் சென்றுகொண்டிருப்பார்களானால், அவர்கள் வாக்குகள் (vote) அளிக்கலாமா?

**பதில்** - ஒருவேளை அவருக்கு அச்சபையாரின் சூழ்நிலைகள் குறித்தெல்லாம் எவ்விதமான விஷயமும் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் அவர் அவர்களை நோக்கி, சகோதரரே, என்னுடைய வாக்கை (vote) நான் அளிக்கத்தக்கதாக இங்குள்ள எவரையும் பற்றி எனக்குப் போதுமான அளவு தெரியாது. ஆகவே, வாக்கு (vote) அளிக்க நான் மறுக்கின்றேன் என்று கூறுவாரானால், அவர் ஞானமாய் நடந்துகொண்டுள்ளதாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். ஆனால், ஒருவேளை அவர் அவ்விடத்தில் சில நாட்கள் அல்லது சில வாரங்கள் தங்கியிருந்தாரானால், மேலும், சில வாரங்கள் அல்லது மாதங்கள் அவ்விடத்தில் தங்கும் வாய்ப்பு அவருக்கு இருக்கும் பட்சத்தில் மற்றவர்களைப் போன்று அவருக்கும் அங்கு வாக்கு (vote) செலுத்த உரிமையுண்டு என்று நான் எண்ணுகின்றேன். அவர் தொகுதிகள் (volumes) விநியோகிப்பவராய் இருப்பதினால் அவர் தடைப்பண்ணப்படாமல், மாறாக, அவருடைய நலனுக்கடுத்த ஏதோ ஒன்றிற்காகவே அவர் தடைபண்ணப்படுகின்றார். அவர் தனது ஜீவியத்தை தத்தம் பண்ணினதின் மூலம், தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டுபவராக இருக்கின்றார்.

## 13. தேர்ந்தெடுத்தல் - சபையை சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு (vote) அளித்தல்.

**கேள்வி (1910)-3** - வாக்காளருக்கான தகுதி தொடர்பான விஷயத்தில், அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களே வாக்களிக்க (vote) வேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். சபையை சந்திக்க

வருபவர்கள் குறித்து என்ன சொல்லுகின்றீர்கள்? அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வந்து கொண்டிருப்பதோ அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து வரும்படியான தங்களுடைய நோக்கத்தை அறிவிப்பதோ/தெரியப்படுத்துவதோ அவர்கள் வாக்கு (vote) அளிப்பதற்கு அவர்களை தகுதியுள்ளவர்கள் ஆக்குமோ?

**பதில்** - வாக்குகள் (vote) செலுத்தும்படிக்கு அழைக்கப்படும்போது, "இன்று இங்கு கூடியிருக்கும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் - இச்சபையில் கூடி வருவதற்கான விருப்பம் கொண்டுள்ளவர்கள், வாக்குகள் (vote) செலுத்தும்படிக்கு ஆவலுடன் அழைக்கப்படுகின்றார்கள். மற்றும் இச்சபையில் தொடர்ந்து கூடுவதற்கு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள், வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம். மற்றும் முழுமையாக அர்ப்பணம் பண்ணாத எவரும் வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், இதுவே இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது என்று கூறுவது நேர்த்தியாயிருக்கும் என்பது நமது யோசனையாக/எண்ணமாக இருக்கின்றது. (இது ஒவ்வொரு/ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் சபையாருக்கும் தெரிவிக்கப்பட வேண்டிய வார்த்தைகளாக உள்ளது. மேலும், அந்தந்த இடங்களில் காணப்படும் சபையாரே அர்ப்பணம் பண்ணினவர்களின் எண்ணிக்கையாய் இருக்கின்றார்கள்). என்னுடைய கணிப்பின்படி, அப்பட்டணத்தில் வாழும்படிக்குப் புதிதாய் வந்துள்ள ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் விஷயம் எவ்விதமான வித்தியாசத்தையும் காட்டுவதில்லை. ஏனெனில், நாம் ஜேம்ஸ் டவுனில் அல்லது புரூக்ளின் அல்லது பிட்ஸ்பர்க் அல்லது நியூ ஓர்லியன் அல்லது வேறு ஏதாகிலும் இடத்தில் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் சரி, நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்றோம்.

## 14. தேர்ந்தெடுத்தல் (election) - மூப்பர்களின் மனோநிலை அங்கீகரிக்கப்படாத பட்சத்தில்.

**கேள்வி (1910)-1** - மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சகோதரனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதெனில், அவருடைய மூப்பருக்கான பணிக்காலம் நிறைவடையும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதை அவர் ஏற்கமுடியாது என்று மறுப்புத் தெரிவிப்பது ஞானமான முறையாக இருக்குமோ என்று நான் கேட்க விரும்புகின்றேன்?

**பதில்** - ஒருவேளை நான் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் காணப்பட்டால், நான் இவ்வாறாகவே நடந்துகொள்வேன் என நான் நம்புகின்றேன். அதாவது, சபையிலுள்ள வேறொரு சகோதரனை என் மனதில் நான் கொண்டுவந்து, அவரை நான் முன்மொழிவேன் (nominate). ஆனால், ஒருவேளை நான் முன் மொழியப்பட்டால், நான் அவர்களிடம் பின்வருமாறு கூறுவேன். சகோதர சகோதரிகளே என்னால் முடிந்தமட்டும் நான் உங்களுக்கு ஊழியம் புரிந்துள்ளேன், மேலும், உங்களை திருப்திப்படுத்துவதில் நான் குறைவுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். ஆனாலும், என்னால் முடிந்ததை உங்களுக்குச் செய்தேன் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகின்றேன். இருப்பினும், நான் உங்களை திருப்திப்படுத்தவில்லை, இதை நான் அறிவேன். ஏனெனில், நான் திருப்தியாய் நடந்துகொள்ளவில்லை என்பதை உங்களில் அநேகர் என்னிடம் தெரிவித்தீர்கள். மேலும், என்னால் முடிந்தமட்டும் சீர்திருத்திக்கொள்ள முயற்சித்தேன். ஆனாலும், போதுமானளவு நான் முன்னேற்றம் அடையவில்லை. ஏனெனில், நீங்கள் உங்களில் சிலராகிலும் - இன்னமும் குற்றம் கண்டுபிடித்தீர்கள். நான் உங்களிடம் குற்றம் கண்டுபிடிக்க வரவில்லை - குற்றம் என்னிடத்தில் இருக்கின்றது என நான் ஏற்றுக்கொள்கின்றேன். இன்னின்னபடி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறபடியெல்லாம் என்னால் இருக்க முடியவில்லை. மற்றும் நான் உங்களுக்கு எப்படி ஊழியம் புரிய விரும்புகின்றேனோ அப்படி என்னால் ஊழியம் புரியமுடியவில்லை. ஆகவே, என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு நலமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். நான் இன்னின்ன சகோதரரை முன்மொழிந்துள்ளேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு - மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ப இச்சகோதரனை நீங்கள் தேர்ந்தெடுக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன் - ஒருவேளை இவர் நம் அனைவரையும் நன்கு திருப்திப்படுத்தலாம். நான் இவருக்கு உதவி செய்ய முயற்சிப்பேன் என்றும், இவருடைய கரங்களைத் தாங்கிப்

பிடிப்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றும் நான் வாக்களிக்கின்றேன். மேலும், மற்ற ஒரு சகோதரன் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாக நான் உண்மையாய்/ஊக்கமாய் முயலுவேன். ஆனால், இப்படியெல்லாம் கூறின பிற்பாடும் சபையார் என்னிடம் இல்லை, உம்மிடத்தில் நாங்கள் குறைவுகள்/குற்றங்கள் கண்டுபிடித்திருந்தாலும்கூட உம்மைதான் நாங்கள் தேர்ந்தெடுக்கப்போகின்றோம் என்று கூறுவார்களேயானால், நான் அவர்களிடம் பின்வருமாறு கூறுவேன்: ஒருவேளை கடந்த காலத்தில் நான் செய்தவைகளைக் காட்டிலும் அடுத்தமுறை என்னால் செய்யமுடியாமல்கூட இருக்கலாம். அதற்கான பொறுப்பு உங்களிடத்திலேயே உள்ளது. காரணம், என்னால் முடிந்தவைகளையே நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கின்றேன் என்று நான் உங்களிடத்தில் கூறிவருகின்றேன். ஆகையால், ஒருவேளை நான் உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தாமல் காணப்படும்போது, என்னைக் குறித்தும் மனஸ்தாபத்திற்குள்ளாகாதீர்கள். நான் சபையாரிடம் உறுதியாக இவைகளைப் பேசி விடுவேன். இதனால், அவர்கள் என்னைக் குறித்த முடிவிற்கு வரமுடியும். ஆனால், ஒருவேளை அவர்களில் பெரும்பான்மையானவர்கள் (majority) உதாரணத்திற்கு, தொன்னூறு சதவிகிதம் அல்லது சபையாரின் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் என்னை பரிந்துரைக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் அதை கர்த்தருடைய சத்தமாகக் கருதி, இப்பொழுது நான் மறுப்பு தெரிவிக்கமாட்டேன் என்று கூறுவேன். எந்தவிதத்திலும் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் நான் நிச்சயமாய் மறுப்பு தெரிவிக்கவுமாட்டேன். மேலும், இல்லை நீங்கள் என்னிடத்தில் குற்றம் கண்டுபிடித்தீர்கள், ஆகையால், இப்பொழுது மூப்பர் ஸ்தானத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறவுமாட்டேன். இப்படிக் கூறுவது தவறு என்று நான் கருதுகின்றேன். இப்படிப்பட்டதான ஆவி நம்மிடத்தில் இருக்க வேண்டாம். (இச்சூழ்நிலையில் காணப்படும் சகோதரன் குற்றஞ்சாட்டுவதற்கு சில காரணங்கள் இருக்கின்றது என நாம் நினைவில் கொள்ள வேண்டும்). அவ்வப்போது ஏதாகிலும் விதத்தில் நம்மில் குற்றம் கண்டுபிடிக்கப்படாதபடிக்கு நம்மில் எவரும் பூரணர்கள் இல்லை. மேலும், ஒருவேளை சபையார் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், நாம் அதை சகிப்போமாக. மற்றும் அதன் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மேலும், அவ்விஷயத்தில் தாழ்மையாயிருப்போம். ஒருவேளை இது நாம் பதட்டம் அடையாதபடிக்கும், வீழ்ச்சிக்குள்ளாக போகாதபடிக்கும் நம்மைக் காத்துக்கொள்ளலாம்.

## 15. தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல் (Re nomination).

**கேள்வி (1910)-2** - மூப்பர்களின் தேர்தலின்போது, அச்சபையாரில் ஒருவர் முன்மொழிவதற்குப் பதிலாக, தற்போது மூப்பராகக் காணப்பட்ட ஒருவர், முன்மொழிவது சரியாக இருக்குமென்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

**பதில்** - தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பருக்கான காலப்பகுதி முடிவடைந்த பிற்பாடு, அவர் மூப்பர் அல்ல என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே, அவரும் சபையாரிலுள்ள மற்றவர்களைப் போன்றவராகவே காணப்படுகின்றார். மேலும், மற்றவர்களைப் போன்று அவரும் முன்மொழியலாம். ஏனெனில், அவரும் மற்றவர்களைப் போன்றவரே ஆவர். (அவருக்கான காலம் முடிந்த பிறகு அவர் மூப்பர் இல்லை). வேறொருவரை நிறுத்துவதற்கான வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் மூப்பராய் இருந்த ஒருவர் தேர்தல் நடத்துவது என்ற கருத்து மிகவும் ஞானமற்றது என நான் எண்ணுவதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அறிவு கூர்மைமிக்க ஒரு சகோதரனை நேர்மையுடனும், நியாயத்துடனும் நடந்துகொள்ளும் சகோதரனை மூப்பருக்கான தகுதியில்லாதவர் அல்லது தகுதியுடையவராகக் கருதப்படாத ஒருவர், வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் அவைத்தலைவராக (chairman) செயல்படும்படிக்கு கேட்டுக்கொள்ளப்படுவது எப்போதும் விரும்புவதற்கு ஏதுவாய்க் காணப்படும். இவ்விதமாய், செய்யப்படும்போது, அவைத்தலைவராக இருந்ததின் மூலம் ஒருவர் தனக்கு ஆதரவு சேர்த்துக்கொண்டார் என்ற குற்றச்சாட்டிலிருந்து (மூப்பர் தகுதியுள்ள) எவரும் தப்பித்துக்கொள்ளலாம். மற்றும், சபையாரும்கூட முன்மொழியப்பட்ட நிலையிலும், அவைத்தலைவரின் நிலையிலும் தங்களுக்கு முன்பு நின்றுகொண்டிருக்கும் ஒருவருக்கு, தங்களுடைய வாக்குகளைச் செலுத்தாத சூழ்நிலையிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம். இப்படியாக, ஒரு நபரை அவைத்தலைவராக நியமிப்பது எப்போதும் சாத்தியமாய் இராவிட்டாலும்,

ஒருவேளை சாத்தியமாய் இருக்கும்பட்சத்தில் மூப்பராக முன்மொழியப்படுவதற்கான வாய்ப்புள்ள ஒருவரை அவைத்தலைவரின் ஆசனத்தில் அமர்த்துவதைப் பார்க்கிலும், வேறொருவரை அமர்த்துவது விரும்பப்படுவதற்கு ஏதுவாகக் காணப்படும் என்று நான் எண்ணுகின்றேன்.

## 16. தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல்.

**கேள்வி (1910)-1 -** முன்மொழிதல் (nomination) எதுவும் பண்ணாமலேயே சீட்டு மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் மற்றும் பெரும்பான்மையான வாக்குகளை உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதும் நன்றாய் இருக்குமோ?

**பதில் -** நம்முடைய கருத்து அநேகமாகக் கொஞ்சம் குழம்பியிருக்கக்கூடும். இரண்டுவிதத்தில் ஏதாகிலும் ஒன்றிற்கு ஆதரவாக என்னால் ஏதாகிலும் கூறமுடியும். ஆனாலும், சீட்டு மூலம் வாக்கு (vote) அளிக்கும் முறையை கர்த்தர் ஏற்படுத்தவில்லை என்பதை என் மனதில் உள்ளது. கைகளை மேலே உயர்த்துவதின் மூலமே வாக்குகள் (vote) அளிக்கப்படும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். சீட்டுகள் மூலம் வாக்குகள் அளிப்பது, அதாவது, ஒன்றும் கூறாமல் நீங்கள் வாக்குகள் அளித்தவிதமும் எவருக்கும் தெரியாமல் இருப்பது சிலசமயம் எளிமையாக இருக்கும் என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனாலும், கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ள வழியை விட்டுவிடுவது ஞானமான காரியமாக இருக்குமோ? ஒருவேளை ஒரு இடத்திலிருக்கும் சபை அங்கங்கள் சீட்டு மூலம் வாக்குகள் (vote) செலுத்த முடிவெடுத்திருந்தால், அவர்களைக் குறுக்கிடுவது எனக்கடுத்தக் காரியமல்ல. ஒருவேளை, நான் அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்த பிற்பாடும்கூட அவர்கள் ஆலோசனையை ஏற்க மறுத்தால் அவர்களைக் குறுக்கிடுவது இன்னமும் எனக்கடுத்தக் காரியமல்ல. நான் நினைப்பது போன்று மற்றவர்கள் நினைக்கவில்லை என்ற காரணத்திற்காக, மற்றவர்கள் அனைவரும் பிடிவாதக்காரர்கள் என்று நினைப்பவனைப் போல இருக்க நான் விரும்பவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் விளக்கின பிற்பாடு, சபையாரின் வாக்கிற்கும் (vote) முடிவிற்கும் நாம் விட்டுவிடுவோமாக. மற்றும், பலனையும் கர்த்தரிடத்தில் விட்டுவிடுவோம். ஒருவேளை, தாங்கள் தவறு செய்துள்ளதை அவர்கள் கண்டு கொண்டால், அது அடுத்தமுறை நினைவுகூர்ந்து, ஜாக்கிரதையாய் இருப்பார்கள். ஒருவேளை நாம் ஞானமாகச் செய்தால், நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்வோம். ஆனால், சகோதர சகோதரிகளே, வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு ஆதரவாகவே என்னுடைய செல்வாக்கை நான் எப்பொழுதும் பயன்படுத்துவேன் என்று நான் நம்புகின்றேன். (மேலும், இம்முறையானது, சபையார் சரியான தைரியம் கொண்டிருக்க வேண்டுமென்பதைப் போதிக்கின்றது என்ற இதன் அநுகூலம்/நன்மை எடுத்துரைக்கப்பட வேண்டும்). ஒரு நபர் மூப்பர் ஸ்தானத்திற்குப் பொறுத்தமற்றவராய் இருந்தும்கூட, அவர் எனக்கு உறவினராக இருப்பதினால், அவருக்கு என் கரங்களை உயர்த்துவேனா? இல்லை, என்னுடைய தேவனுக்கு நான் உண்மையாய் இருக்க வேண்டும்.

## 17. தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்து ஆராய்தல்.

**கேள்வி (1910)-2 -** ஒரு சகோதரன் மூப்பராக முன் மொழியப்பட்டிருக்கும்போது, தேர்தலுக்கு முன் அச்சகோதரனைக் குறித்து எவ்வளவு தூரம் நாம் ஆராயலாம்? எதுவரை வரம்பு உள்ளது?

**பதில் -** சபையில் ஊழியம் புரிவதற்கான வேட்பாளர்களைக் குறித்து அதிகம் ஆராய்வது சரியென்பது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். நாம் ஒருவேளை ஒருவரையொருவர் கடித்து பட்சிப்போமானால், ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவோமென்று அப்போஸ்தலர் கொடுக்கும் எச்சரிப்பை நீங்கள் நினைவுகூரலாம். சபையாருக்கு முன்பு நீங்கள் என் சகோதரனுக்கு எதிராக எழுந்து நின்று அவர் தலையை சீவுகிற விதத்தில் அல்லது அவர் அணியும் வஸ்திரங்களின் நிறத்தில் மற்றும் அவர் குடும்பத்தில் அவருக்கு எத்தனைக் குழந்தைகள் இருக்கின்றார் மற்றும் இது மற்றும் அது என்று குற்றங்கண்டுபிடிக்க தொடங்கினால், ஆராய்வதற்கு/வாதிடுவதற்கு உங்களுக்கு அநேக காரியங்கள் இருக்கும். மேலும், அவரை முற்றும் முழுமையாய் ஆராய்ந்து முடியும்போது, அவர் அடுத்து, உங்களைக் குறித்து ஆராய ஆரம்பிப்பார். ஆகவே, சபையார்

அனைவரும் இப்படியான அனுபவம் பெற்றிருக்கக்கூடும். ஆனால், இதினால் நன்மை உண்டாகுவதில்லை. என்னுடைய கருத்து பின்வருமாறு: சகோதரருடைய குணநலன்களைக் குறித்து அதிகம் ஆராய்வதற்கான/வாதிடுவதற்கான அவசியமில்லை. ஏனெனில், சபைக்கு ஏதோ விதமான ஊழியம் புரிவதற்கென ஒரு சகோதரனுக்கு வாக்களிக்கும் (vote) ஒவ்வொருவரும் அவரைப் பற்றி கொஞ்சமாகிலும் அறிந்திருக்க வேண்டுமென்பதே ஆலோசனையாக வழங்கப்படுகின்றது. மேலும், ஒருவேளை தனிப்பட்ட பழக்கத்தின் வாயிலாக ஒருவருக்கு அவரைப்பற்றி தெரியவில்லையென்றால், மற்றொரு சகோதரனுடைய கணிப்பை வழிக்காட்டியாக தனக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, நான் சமீபத்தில் ஓர் இடத்திலுள்ள சபையாருடன் சேர்ந்துள்ளேன். அவர்களது எண்ணிக்கை பன்னிரண்டு என்று வைத்துக்கொள்ளுங்கள். மேலும், அச்சபையிலுள்ள நண்பர்களுடன் கொஞ்சம் பழக்கமே எனக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், அவர்களில் எவருடைய குறைவுகளும் எனக்குத் தெரியாது. ஆனால், அவர்கள் அனைவருடைய நற்குணங்கள் சிலவற்றை நான் அறிந்திருந்திருந்தேன். ஒருவேளை தேர்தலுக்கான வேளை வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள், நான் ஒன்று அல்லது இரண்டு சகோதரர்கள் மிகவும் தெளிவுள்ளவர்களாகவும், மிகவும் ஒளிவுமறைவு அற்றவர்களாகவும் இருப்பதை கவனித்து வந்திருக்கிறேன். மேலும், அதனால் அவர்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையும் ஏற்பட்டது. ஒருவேளை இந்த சகோதரன் இன்னொரு சகோதரனை முன்மொழிந்தால், மேலும், முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்குப் பழக்கமும் இல்லை. இவருக்கு எதிரான எந்த குறைவும் எனக்குத் தெரியாமலும் இருக்கும்போது, நான் இவருக்கு வாக்குகள் (vote) செலுத்துவதில் தவறில்லை என்று எண்ணுகின்றேன். ஏனெனில், இவரை முன்மொழிந்த சகோதரன் இவருடைய நற்பண்பைப்பற்றி ஏதோ அறிந்தவராக இருக்கின்றார். ஒருவேளை இவரை முன்மொழிந்த சகோதரனோடு எனக்கு பழக்கமிருக்குமாயின், முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்கும் மறைமுகமான/நேரடியற்ற பழக்கமுள்ளது. நான் சொல்வது புரிந்திருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே, எவருடைய குணநலன்களும் விசேஷமாக ஆராய்ச்சி செய்யப்படாமலேயே வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்பு வாக்குகள் அளிக்கும் உரிமையை செயல்படுத்தப் போகிறவர் ஒவ்வொருவரும் முதலாவதாக கர்த்தருடைய விசுவாசியாக இருந்து, பாவத்திலிருந்து திரும்பி தன்னை முழுமையாக அர்ப்பணம் பண்ணினவனாக இருக்க வேண்டுமென்பதையும், அச்சபையாரின் அங்கங்கள் மாத்திரமே வாக்குகள் செலுத்த வேண்டுமென்பதையும், மற்றும், வாக்குகள் செலுத்துபவர்கள் தாங்கள் எவ்விதமாய் வாக்குகள் செலுத்த கர்த்தர் விரும்புவார் என்று நம்புகின்றார்களோ அவ்விதத்திலேயே அல்லாமல் வேறுவிதத்தில் செலுத்தக்கூடாது என்பதையும் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

இவைகள் போதுமானதென்று நான் நம்புகின்றேன். மேலும், சபையார் தாங்கள் ஒன்றைப் பற்றியும் அறியாத ஒருவருக்கு நிர்விசாரமாய் வாக்குகள் செலுத்திவிடாமல், மாறாக, தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கும் ஒருவருடைய கணிப்பு அல்லது ஆலோசனையின்படி வழிநடத்தப்படுவதற்கு நாடத்தக்கதாக மேற்கூறிய காரியங்கள் அவர்கள் மீது போதுமான பொறுப்பை ஏற்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன். ஒருவேளை தவறு செய்யப்பட்டால், ஒருவேளை தவறான நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் என்ன செய்வது? தவறான காரியம் நடந்துவிட்டது என்ற முடிவிற்கு நான் வருவேன். யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனும் விஷயத்தில் அதீக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற படிப்பினையை அச்சபையார் கற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்று எண்ணுவதே சரியான விஷயமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே, ஒருவேளை தோந்தெடுக்கும் விஷயத்தில் அவர்கள் கண்மூடித்தனமாக செயல்பட்டிருந்திருப்பார்களானால், இதனால் அவர்களுக்கு நல்லதொரு பாடம் உண்டாகும். அடுத்தமுறை தேர்தல் வரும்போது, அநேகமாக அவர்கள் மிகவும் கவனமாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வார்கள். அநேகமாக இச்சபையின் அங்கங்கள் மிகவும் கவனமாய் இருக்கத்தக்கதாக அவர்கள் இவ்விதத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாகக் கூட இருக்கலாம். எந்த சூழ்நிலையிலும் சரி, கர்த்தருடைய ஜனங்களில் எவரேனும் நார்நாராகக் கிழித்துப்போடப்படக்கூடியதான எத்தகைய காரியத்திற்கும் எதிராக என்னுடைய முழு செல்வாக்கை எந்த சபையிலும் நான் செலுத்துவேன். சகோதர சகோதரிகளுக்கு (உண்மையில் குறைச்சல் உண்டாக்கும்) காரியங்கள் பேசப்பட்ட சில சம்பவங்களையும் நான் அறிவேன். இக்குறைகள் அவர்களுடைய கடந்தகால ஜீவியத்தில் காணப்பட்டது அநேகமாக உண்மைதான். மேலும், இவைகளை உணர்ந்த மாத்திரத்தில் அவர்கள் தங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டார்கள்.

இவ்விஷயத்திலும் சரி, வேறு விஷயத்திலும் சரி என்னுடைய கருத்து ஒன்றுதான். மேலும், கர்த்தருடைய ஆடுகளுக்கு எதிரான இத்தகைய அடிகளுக்கும், பீறிப்போடுதலுக்கும் எதிராக என்னுடைய செல்வாக்கை நான் செலுத்துவேன். இக்காரியங்கள் ஆடுகளில் ஓநாயின் ஆவியை விதைத்து, விருத்தியாக்கும் என நான் எண்ணுகின்றேன். ஆகவே, இவைகள் தடுக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையார் மத்தியில் முக்கியமானவராகக் காணப்படும் ஒரு சகோதரனிடம் இந்த முன்மொழிதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று மற்றவர்களால் கேட்கப்பட்டால் அல்லது அவர் ஏதோ விதத்தில் அதனைக் குறிப்பிட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தாரானால், அவர் பின்வருமாறு கூறுவது சரியாக இருக்கும் : என் அன்பு சகோதரரே, நீங்கள் கேட்ட முன்மொழிதல் குறித்து சில ஆலோசனைகளைக் கொடுக்க நான் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளேன். இதைக்குறித்து நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நான் இந்தந்த நபருக்கு வாக்கு செலுத்த வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கின்றது என நான் எண்ணுகின்றேன். இப்படி பதிலளிப்பது சரியாக இருக்கும். (மேலும், இவ்வார்த்தைகள் இவருடைய செல்வாக்கு செலுத்தப்படும் சகோதரர்களுக்கு ஓரளவுக்கு உதவியாக இருக்கும். மேலும், ஒருவேளை இவருக்கு செல்வாக்கு இல்லையெனில், இவ்வார்த்தைகள் உதவியாய் இராது).

## 18. தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்து பதிவு செய்தல்.

**கேள்வி (1910)-1 -** வாக்களிக்க (vote) தவறுகிறவர்கள் குறித்து ஏதேனும் பதிவுகள் நாம் பதித்து வைத்திருக்க வேண்டுமா?

**பதில்** - வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்னதாகவே இக்காரியங்கள் குறித்து தெளிவுப்படுத்துவது என்னுடைய வழக்கமாகும். அதென்னவெனில், கூடியிருக்கும் ஒவ்வொருவருமாகிய அவனும், அவளும் தங்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது - வேட்பாளருக்கு (candidate) எதிராக அல்லது ஆதரவாக வாக்குகள் செலுத்துவதற்கான பொறுப்பு இருக்கின்றது என்று உணர வேண்டும். மேலும், ஒருவேளை வாக்குகள் (vote) செலுத்தத்தக்கதாக ஒருவருக்கு போதுமான அறிவு இருக்கிறதென்றால், அல்லது அவர் அர்ப்பணம் பண்ணினவராக இருந்தால், அச்சபையாரோடு தொடர்ந்து கூடுகைகளில் கலந்துகொள்ள வேண்டுமென்றால், அவர் வாக்கு (vote) செலுத்துவதற்கான பொறுப்பை உடையவராவார். மேலும், அவர் வாக்கு செலுத்தலாமா அல்லது இல்லையா என்பது விருப்பத்திற்கு விடப்பட்ட காரியமாக இல்லாமல், மாறாக, வாக்கு செலுத்துவது அவனுக்குரிய கடமையாகும். இக்காரியங்கள் வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே வலியுறுத்தப்பட்டால், அனைத்து அன்புக்குரிய நண்பர்களும் பொறுப்பை உணர்ந்துகொள்ள முடியும். வெகுசிலரே பின்வாங்குவதற்கு முயற்சிப்பார்கள். இது முன்னதாகவே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## 19. தேர்ந்தெடுத்தல் - அப்போஸ்தலர்களின் வழக்கத்தின்படி ஏழு பேரை தேர்ந்தெடுப்பதைப் பின்பற்றுதல்.

**கேள்வி (1911)-2 -** சபைக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நாம் அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றி ஏழு பேரை நியமிக்கலாமா? ஒருவேளை கூடாது என்றால் ஏன் செய்யக்கூடாது?

**பதில்** - ஏழு பேரை நியமிக்கும் எந்த அப்போஸ்தலரின் மாதிரியையும் நான் அறியேன். ஒருவேளை, அப்படிப்பட்டதான ஏதாகிலும் மாதிரி இருக்குமாயின் அதைக்குறித்து அனைத்தையும் கண்டுபிடிக்கும் விஷயத்தில் நானே மிகவும் மகிழ்ச்சிக்கொள்வேன். ஏழு உதவியாளர்களை அப்போஸ்தலர் நியமித்ததைக் குறித்து எனக்கு ஞாபகமுள்ளது. ஏழு மூப்பர்கள் தொடர்பாக நான் ஒருபோதும் கேட்டதில்லை. இது எனக்கு புதிதாக இருக்கின்றது. ஒருவேளை நாம் உதவியாளர்களைக் குறித்து சிந்திக்கும்போது அதுவும் ஒவ்வாது. ஏனெனில், சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப அவர்கள் அன்று அவ்வளவு உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சபையின் எண்ணிக்கை ஆறு என்று வைத்துக்கொள்ளுங்கள், அவர்களால் எப்படி ஏழு மூப்பர்களையும், ஏழு உதவியாளர்களையும் நியமிக்கமுடியும்? கர்த்தர் சபையார் இரண்டு அல்லது

மூன்று பேரையுடைய சிறு கூட்டமாக இருப்பார்கள் என்று கூறுகின்றார் - "எங்கே என் நாமத்தினிமித்தம் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்." இவ்விஷயம் குறித்ததான நமது கருத்துக்களை வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதியில் மிகவும் குறிப்பாக முன்வைக்கப்படுவதை நீங்கள் பார்க்கலாம்.

## 20. தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர்.

**கேள்வி (1911)-3 –** ஒருவேளை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு சகோதரன் புதிய ஏற்பாட்டின் காரியங்களுக்கு இசைவுடைய தகுதியுடன் காணப்பட்டும் ஆனால், அவர் எவர் மூலமாகவும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லையெனில் இப்படிப்பட்ட சகோதரன் மூப்பராக நியமிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கும் என்பது உங்கள் கணிப்பாக இருக்குமா?

**பதில்** - அப்படிதான் இருக்கும். நம்முடைய ஞானஸ்நான (Baptist) நண்பர்கள் நினைக்கும் அதே கண்ணோட்டத்தில் நாம் தண்ணீர் ஞானஸ்நானம் முக்கியமானது என்று எண்ணுவதில்லை - அதனை ஓர் அடையாளமாக தவிர மற்றபடியும் நாம் எண்ணுவதில்லை. ஆனால், ஞானஸ்நானமாகிய மிக எளிமையான ஓர் அடையாளத்தை இதுவரையிலும் பார்க்க/உணர்ந்துகொள்ள முடியாத சகோதரன் இவ்விஷயத்தில் குருடனாகவே இருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஒரு விஷயத்தில் குருடனாக இருப்பாரானால், வேறு எத்தனை விஷயங்களில் அவர் குருடராக இருக்கக்கூடும்? இவரை மற்றவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு அதாவது, ஒருவேளை இவரைக்காட்டிலும் அதிகமான ஏற்கனவே கண்டிருக்கும் ஒருவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு அவர் ஞானஸ்நானம் காரியத்தைப் பார்க்க ஆரம்பிப்பது வரையிலும் நான் காத்திருப்பேன். சகோதரத்துவத்திற்கு/சகோதரன் ஆவதற்குப் பரீட்சையாக நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தை ஆக்கவில்லை என்பதையும், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாத ஒரு சகோதரனை நாம் புரிந்துகொண்டவரை கர்த்தருடைய பந்தியில் வரவேற்க வேண்டும் அல்லது எல்லாவிதத்திலும் கர்த்தருக்குள் சகோதரனாக வரவேற்கப்பட வேண்டும். ஆனால், ஒருவரை கர்த்தருடைய சகோதரனாகவும், சரீரத்தினுடைய அங்கமாகவும் எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்வதும், ஒரு காரியமாகவும் மற்றும் அவர் போதிப்பதற்கான தகுதியுடையவர் என பார்ப்பதும், வேறு காரியமாகவும் உள்ளது. என்னைப் பொறுத்த வரையில் புதிய ஏற்பாட்டின் மிகவும் எளிமையான விஷயத்தை கர்த்தரும், அனைத்து அப்போஸ்தலர்களும் உண்மையான முழுகுதலாகிய அர்ப்பணிப்பிற்கான அடையாளமாக தண்ணீர் ஞானஸ்நானத்தில் பங்குக்கொண்டதுமான விஷயத்தை ஏற்கனவே உணர்ந்தவனே போதிப்பதற்குத் தகுதியுடையவனாவான்.

## 21. தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். விசேஷமான நாளென்று ஒன்றில்லை. (Any Time. No Special Date.)

**கேள்வி (1911)-1** - ஒருவர் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாத நிலையிலும் ஆவிக்குரிய தகுதிகளையுடையவராய் இருந்தும், சில பூமிக்குரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளினிமித்தம் அவர் தேர்ந்தெடுக்கப்படுவது தடங்கல் பட்டும் இருக்கையில் திறமைமிக்க சகோதரன் ஒருவரை விசேஷித்த தருணங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் ஒரு கூடுகை நிகழ்ச்சியில் செய்தியாளராக அமர்த்துவது குறித்து உங்களது கருத்தென்ன?

**பதில்** - ஒருவேளை சபையாரும் அவரை (மூப்பராக) தேர்ந்தெடுக்க விரும்பினால், அவரைத் தேர்ந்தெடுக்கும் காரியத்தை மிக சுலபமாக நடத்தலாம் என்று நான் எண்ணுகின்றேன். இதனைப்பற்றி கலந்து ஆலோசித்து, வாக்கு (vote) எடுங்கள். இப்படி செய்வது, காரியத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரும். அவர் எப்போது வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். குறிப்பிட்ட நாட்களில்தான் மூப்பரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற எந்த அவசியமுமில்லை. அவரை சபையார் தகுதியான நபர் என்று ஒருவேளை கருதினால், மேலும், அவசியம் இருக்கும் பட்சத்தில் அவர் வருடத்தின் நடுவில் அல்லது அடுத்த மாதம் அல்லது வேறு

எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்படலாம். இதுபோன்றதான சூழ்நிலைகளில் காரியத்தை சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைக்குறித்து, ஒருமாத காலமாக அல்லது இன்னும் அதிகக்காலமாக சிந்தித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமை அன்று, இதற்காக சபையாரை வாக்கு செலுத்தும்படி கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். (இது சபையாருக்கு முழு வாய்ப்பை அளிக்கின்றது. ஒருவேளை அவர்கள் வாக்கு (vote) செலுத்தினார்களெனில் அவ்வாக்கின்படி தீர்மானம் எடுக்கப்படும்).

## 22. தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல். (Serving Without Appointment)

**கேள்வி (1911)-2 -** எந்த சகோதரனும் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அவரை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் எவ்விதமான மறுப்புமில்லாமல் இருக்கும்போதிலும் சபையில் தலைவர்களாகப் போதகர்களாகப் பிரதிநிதிகளாகப் புது பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாம் சில இடங்களில் வாசித்துள்ளோம். மற்ற இடங்களிலும் கூட இப்படியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக இருக்குமானால், சபையில் நம்முடைய மூப்பர்கள், பத்தொன்பது உதவிக்காராக்களையும் சபையாரையும் சேர்க்காமல், கூட்டங்கூடி ஓர் உதவியாளரை சபையின் மூப்பராக அல்லது போதகராக அல்லது பிரதிநிதியாக நியமிப்பது என்பது சரியான முறையில் நியமிக்கப்பட்ட மூப்பர் அமர்த்த வேண்டும் என்று கர்த்தர் கூறும் மூப்பர் ஸ்தானத்திற்கு இது தவறுதானே?

**பதில் -** இக்கேள்வியை கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, நாம் அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும், கொடுக்கப்பட்டுள்ள வேதாகம உதாரணத்தையும் நினைவில்கொள்ள வேண்டும். பரிசுத்தவானாகிய ஸ்தேவானின் சம்பவம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அப்போஸ்தலருடைய நடபடிகை புஸ்தகத்திலுள்ள பதிவின்படி அவர் சபையில் உதவியாளராகத் தெரிந்துகொள்ளப்பட்டார். மேலும், பரிசுத்தவானாகிய ஸ்தேவானுக்குப் பிரசங்கம் பண்ணுவதற்கான நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. வாய்ப்பு கிடைத்தபோது அவர், ‘சகோதரரே, நான் மூப்பனாகத் தெரிவு செய்யப்படவில்லை, அதனால், என்னால் உங்களுக்குப் பதில் தெரிவிக்க முடியாது’ என்று கூறவில்லை. மாறாக, அவர் நேரே சென்று பிரசங்கம் பண்ணினார். மற்றும் கர்த்தரும் அவரை அதிகளவில் ஆசீர்வதித்தார். அவருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தது - மற்றும் பின்னர் கல்லெறிந்து கொல்லப்பட்டார். இன்னுமாக, இவர் தனது கர்த்தருக்கு அடுத்தபடியாக, முதலில் இரத்தசாட்சியாக மரித்து, கிறிஸ்தவன் என்ற நற்சான்றும் வாங்கினார். அப்போஸ்தலர் கூறுகின்ற காரியங்களை நாம் மீண்டும் நினைவில்கொள்வோமாக - அவர் கூறின வார்த்தைகளில் கொஞ்சத்தை நான் இங்குக் குறிப்பிடுகின்றேன் - யாரொருவர் உதவியாளராக இருந்து, தனக்கான ஸ்தானத்தின்படி ஊழியம் புரிந்து, தன்னுடைய ஊழியத்தில் தாழ்மை காட்டுகின்றாரோ, அவர் தனக்கு நல்ல நிலையைப் பெறுவார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 3:13). அதாவது, சுயாதீனம், சிலாக்கியம் மற்றும் வாய்ப்பாகிய நல்ல நிலையைப் பெறுவார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் யார் மூப்பர்களாக ஊழியம் புரியலாம் என்பதற்கு வாக்கு (vote) செலுத்தும் விஷயத்தில், சபையார் தாங்கள் முந்தின முறை உதவியாளர்களாகத் தேர்ந்தெடுத்தவர்களையும், அந்த உதவியாளர்கள் எவ்வளவு கவனமாய் இருந்தார்கள் என்பதையும் மற்றும் அந்த உதவியாளர்கள் எவ்வளவு உண்மையுடன் இருந்தார்கள் என்பதையும் கவனித்திருக்க வேண்டும். ஏனெனில், இவர்கள் உதவியாளர்கள் என்ற விதத்தில் சில உலகம் தொடர்பான வேலைகளைச் செய்வதிலேயே ஒருவேளை உண்மையற்றவர்களாக இருப்பார்களானால், இவர்கள் மூப்பர்களுக்குரிய ஊழியங்களில் உண்மையுடன் இருப்பார்களென்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இவ்விதமாக, இந்த உதவியாளர்கள் தங்களுடைய உதவியாளருக்குரிய ஸ்தானத்தில் உண்மையாய் இருந்ததினிமித்தம் சபையில் கனத்தையும் முன்னுரிமையுமாகிய நல்ல நிலையை தங்களுக்கென்று பெற்றுக்கொள்வார்கள் என்பதே அப்போஸ்தலனுடைய கருத்தாகும். என்னுடைய கருத்து என்னவெனில், ஆதிசபையில், உதவியாளர்கள் எனும் வகுப்பார் படிப்படியாக மூப்பர் ஸ்தானத்திற்கும் மற்றும் சத்தியத்திற்கும் மிக முக்கியமான ஊழியம் புரியும் ஸ்தானத்திற்கும் முன்னேறுவதற்கு ஏதுவாக ஒழுங்கு பண்ணப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே, உதவியாளர்கள் ஆரம்பத்தில் சில விதமான வேலைகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால், இவர்கள் தேவைப்படும் சமயங்களில்

பயன்படுத்தப்படுபவர்களாக வைக்கப்பட்டிருப்பார்கள். ஆகையால், ஏதேனும் வேலை புரிவதற்கு ஒரு மூப்பர் இல்லாமல் இருந்தாரானால் கமிட்டி உறுப்பினர்கள் உதவியாளர்களைப்பற்றி, "அன்றைய இரவிலுள்ள கூடுகையில் இந்த சகோதரனை நாம் பயன்படுத்திப் பார்ப்போமா" என்றும், வேறொரு தருணத்தில் இதே கமிட்டி உறுப்பினர்கள், "இன்றைய இரவில் நடக்கும் கூடுகைக்கு நாம் அந்த இன்னொரு உதவியாளரைப் பயன்படுத்திப் பார்க்கலாமா? இன்றைய இரவு கூடுகையில் நமக்கு ஒருவர் அவசியம், இவருக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம்" என்பார்கள். இவ்விதமாக, உதவியாளர்களின் ஆற்றலைக் காணத்தக்கதாக கமிட்டி அவர்களை பயன்படுத்திப் பார்த்து அறிந்துகொள்ளும். இல்லையேல், உதவியாளர்கள் எதையேனும் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது சபைக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் தங்களுடைய திறமை என்னவென்பதை வெளிக்காட்டுவதற்கோ வாய்ப்புகள் இல்லாமல் இருக்கும். ஆகவே, இக்கருத்துக்கு எதிரான ஒன்றும் வேதாகம ஆராய்ச்சிப் பாடங்களில் (volumes) எழுதப்படவில்லை. ஏனெனில், இக்கருத்தையே நாம் எப்போதும் கூறிவருகின்றோம். மேலும், இக்கருத்து வேதவாக்கியங்களின் அடிப்படையிலானது, என்றும் நாம் நம்புகின்றோம். இது புரூக்கிலினிலும் மற்ற இடங்களிலும் செயல்படுத்தப்பட்டும் வருகின்றது.

சகோதரன் கேள்வியில் என்ன கேட்க வருகின்றார் என்பதை என்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும், என்னுடைய பதில் பின்வருமாறு உள்ளது. ஒருவேளை, சபையார் தங்களுக்கு நான்கு அல்லது ஐந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்திருக்க அந்த நான்கு அல்லது ஐந்து மூப்பர்கள் ஸ்தானத்திற்கு வந்த பிற்பாடு உதவியாளர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அந்த உதவியாளரை மூப்பராக நடைமுறையில் செயல்பட அமர்த்துவது என்பது, சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவதில்லை. இப்படி செய்வது, அவர்களுக்கடுத்த அதிகாரம் இல்லை என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை சபையார் அந்த உதவியாளராகிய சகோதரனை மூப்பராகவும், முறையான ஊழியனாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களானால், அவரை நியமிப்பது அவர்களுடைய பொறுப்பாய் இருக்கும். ஒருவேளை மூப்பர்கள் தங்களுள் போதுமானவர்கள் இல்லையென்று எண்ணினால், அவர்கள் சபையார் கூடிவரும் ஒரு நாளில் தங்களுக்கு இன்னொரு மூப்பர் தேவையாக இருப்பதினால், இன்னொரு மூப்பரை கூடுதலாகத் தேர்ந்தெடுப்பதில் சபையார் பிரியம் கொள்வார்களா என கேட்கலாம். ஆனால், ஒருவேளை மூப்பர்களுக்குத் தற்காலிகமான தேவைதான் இருக்கும் பட்சத்தில், தற்காலிகமான அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதாவது சில திறமைகளை வெளிப்படுத்தும் உதவியாளர்களை அவ்வப்போது மாத்திரமே தேர்ந்தெடுக்க இந்த மூப்பர்கள் விரும்புகின்றார்கள் என்பதை சபையார் புரிந்த நிலையில் காணப்படுவார்கள் எனில், இது சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவேன். ஆனால், சபையார் ஓர் உதவியாளனை மூப்பராக தெரிந்தெடுக்காதபட்சத்தில், அவரை மூப்பராக நியமிப்பது சரியான காரியமாக இராது.

## 23. தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்கு (vote) செலுத்துதல்.

**கேள்வி** (அவையோரிடமிருந்து எழும்பினது) **(1911)-1** - ஒரு சகோதரன் எழுபத்தைந்து சதவிகிதமாக வாக்குகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்குகள் (vote) குறைவாகப் பெற்றிருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாக அவர் போதுமான அளவு வாக்குகள் பெற்றுக்கொள்ளும்படிக்கு இரண்டாம் விசை அவர் சார்பாக வாக்கெடுப்பது ஞானமானக் காரியமாக இருக்குமோ?

**பதில்** - இதைச் சபையார் ஏகமனதுடன் செய்தால் கூட இதற்கு நாம் மறுப்பு தெரிவிப்பதில்லை. சபையாரின் கொஞ்சம் கவனத்தை மாத்திரமே ஈர்ப்பது நமக்கு வேண்டியதாயிராமல், சபையாரின் கருத்தைப் பெற்றுக் கொள்வதும், சபையாரின் மனங்களுடைய முழு வெளிப்பாடும் நமக்கு வேண்டிய காரியமாகும். பிணக்கு உண்டுபண்ணுவதற்கு மாத்திரமே ஏதுவான எவ்விஷயமும் கூடுமானமட்டும் தவிர்க்கப்பட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் தங்களுடைய தேர்தலில் எழுபத்தைந்து சதவிகிதமான விதியை நியமித்தார்களானால், இதே சதவிகிதமான விதிதான் அடுத்த தேர்தலுக்கும் காணப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாறாக, அவ்விதி அந்த ஒருமுறைக்கு மாத்திரமே கட்டளையாக இருக்கும். ஒருவேளை அடுத்த தேர்தலிலும் அவர்கள் அதே எழுபத்தைந்து சதவிகிதம் விதியைத் தெரிந்துகொண்டார்களானால்,

இன்னுமாக, ஒருவர் இந்த சதவிகிதமான விதிக்கு கொஞ்சம் கிட்ட எட்டியும் முழுமைக்கு வரவில்லையெனில், அவர் அடைந்த வாக்கு சதவிகிதத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு மீண்டும் வாக்கெடுங்கள். மேலும், பின்னர் நியமிக்கப்பட்ட சதவிகிதம் விதி அளவைக் காட்டிலும் அவருக்கு வாக்குகள் அதிகம் கிடைத்திருக்குமாயின் (சபையாரின் விருப்பத்திற்கு ஏற்ப சபையார் காரியங்களை முடிவு செய்ய முழு அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றார்கள்).

## 24. தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா?

**கேள்வி (1914) - 2 -** சபையின் காரியங்களினிமித்தமாக வருத்தத்திலும், குழப்பமடைந்த நிலையில் ஒரு சகோதரி தேர்தல் கூடுகையில் கலந்துகொண்டும் வாக்களிப்பதில் பங்குகொள்ளவில்லை. அச்சகோதரி வாக்குகள் ஒருவேளை செலுத்தியிருந்தால், யாருக்கு செலுத்தியிருப்பார்களோ, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் விட்டார்கள். இந்த சகோதரி வாக்கு செலுத்தாதது தவறா? பாவமா?

**பதில்** - அச்சகோதரி தனது சிறந்த கணிப்பின்படி இதைச் செய்திருக்கிறாள் என்று நான் அனுமானிக்கின்றேன். ஆகையால், இது பாவமல்ல. உங்கள் மனசாட்சி உங்களை வழி தவற செய்யக்கூடியதாய் ஒருவேளை இருந்தாலும்கூட, உங்களுடைய மனசாட்சியின்படி நடப்பதினால் ஒருபோதும் நீங்கள் குற்றவாளிகளல்ல. எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும், உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் செய்தால், நீங்கள் சரியானவைகளை செய்பவர்களாகவே இருப்பீர்கள். ஆகவே, தான் அறிந்துகொண்டதற்கு ஏற்ப தன்னால் முடிந்ததைச் செய்யும் ஒருவனையும் அல்லது ஒருத்தியையும் தேவன் பாவஞ்செய்தவர்களுக்கான பொறுப்பாளிகளாகக் கருதுவதில்லை.

## 25. தேர்தல் - யார் வாக்களிக்கலாம்? Election-Who are to vote?

**கேள்வி (1913)-1-**சபையில் வாக்களிக்க யார் உரிமைப் பெற்றுள்ளனர்?

**பதில் -** முழு அர்ப்பணிப்பின் மனப்பான்மை மற்றும் அதை வெளிப்படையான அடையாளம் - தண்ணீரில் மூழ்குதல் மூலம் வெளிப்படுத்தியவர்கள் தவிர வேறு யாரும் வாக்களிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் கருத்தில்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அடையாளத்தின் மூலம் அர்ப்பணிக்காதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று தள்ளிவிடாமல், சபைக்கு ஊழியஞ்செய்ய தகுதியானவர்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்க அவர்களுக்குப் போதிய வளர்ச்சியில்லை என்றும் அவர்கள் சபையின் ஊழியக்காரர்களாக ஆவதற்கு தகுதி பெறாதவர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

## 26. தேர்தல் - சபை கூடுதலில் கலந்துகொள்ளாத மூப்பர்கள். Election - Of Elders Who do not Attend Meetings.

**கேள்வி (1913)-1-**வெளியூர்களில் ஊழயஞ்செய்யும் சகோதரனே சபைக்கு வரும்போது, வாரநாட்களில் மதியம் நடக்கும் கூடுகை மற்றும் மாலை கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் -** ஏதோ சில வேலையின் நிமித்தமாக மதிய கூடுகைக்கு அவரால் வரமுடியாமல் போயிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். மூப்பராக தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த சகோதரன், அவர் பேசக்கூடிய கூடுகைக்கு மாத்திரம் வருவாரானால் அவர் அனைத்து கூடுகைக்கு வரும்வரை அவரைச் சேர்த்துக்கொள்ளாமல் இருப்பது நன்மையே என்று நான் நினைக்கிறேன். மற்ற கூடுகைக்கு வராமல், தான் பேசக்கூடிய கூடுகைக்கு மாத்திரம் வருவது என்பது அவர் மூப்பருக்குத் தகுதியானவர் அல்ல என்பதும், மற்றவர்களால் போதிக்கப்படுவதற்கும், மற்றவர்களின் வார்த்தைகளைக் கேட்பதற்கு விருப்பம் தெரிவிக்காமல் தான் மாத்திரமே பேச வேண்டும் என்பதும், சபையிலுள்ள யாவைரையும் காட்டிலும் தான் மேன்மையாக இருப்பவர் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக நான் நினைக்கிறேன். "நாம் அனைவரும் சகோதரர்கள்." எப்பொழுதெல்லாம்

ஒருவர் "நான் சகோதரர்களில் ஒருவரல்ல" என்றும், "தனக்குப் பேசும் வாய்ப்பு இருக்கும்போது மாத்திரமே சபைக்கு வரவேண்டும்" என்றும் நினைக்கின்ற ஒரு சகோதரனுக்காக நான் அஞ்சுகிறேன். அவருடைய நன்மைக்காக அவரைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்தச் சகோதரனை இராஜ்யத்திற்குத் தகுதியற்றவராக மாற்றக்கூடிய வேலையை நாம் செய்ய வேண்டாம். நாம் அந்தச் சகோதரனையும், அவருடைய நலனையும், சபை மற்றும் சபையின் நலனையும் கருத்தில் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

## 27. சபை - மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல். Submission to Elders.

**கேள்வி (1909)-1-**கீழ்ப்படிதல் என்னும் கொள்கையானது, மூப்பரால் ஒருவேளை ஆலோசனையாகக் கூறப்பட்ட ஒருவிதமான ஆராதனை ஒழுங்குமுறையை ஏற்றுக்கொள்வதற்கு நம்மை வழிநடத்துமா?

**பதில்** - சபையின் ஒழுங்குமுறையில், ஒன்றாகக் கூடி ஆராதிக்கும் வேளையில் கூடுகையின் ஏற்பாடுகளுக்கு (ஏற்றவாறு) நம்மையே நாம் கீழ்ப்படுத்துவது நமக்கு மிகவும் சரியானதாக இருக்கும். ஒருவேளை நாம் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுள் ஒருவராக இருக்கும் பட்சத்தில், மூப்பர் இல்லாதபோது ஆராதனைக்கு ஒன்றுகூடுபவர்களுக்கு ஏற்றதான, கூடுகைக்கான முறைமை எவைகள் என்று நாம் சொல்லலாம்? மூப்பரானவர் கூடுகைக்கு வர இயலாதிருக்கும் தருணத்தில், யார் கூடுகையை நடத்த வேண்டும் என்பதைக் கூறுவது ஒரு மூப்பருக்கும் சரியானதாக இருக்கும். மூப்பரால் நியமிக்கப்பட்ட ஒருவரும், "நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுவது போல, கூடுமான மட்டும் அவருடைய யோசனைக்கு உகந்தவாறு கீழ்ப்படிவது சரியானதாக இருக்கும். உதாரணத்திற்கு, சகோதரர் ஷெர்மான் (Bro. Sherman) அவர்கள் கூடுகையைத் துவக்கி வைத்து, "இப்பாடலைப் பாட நாம் எழுந்திருப்போமா? என்று கூற விரும்புகிறார் எனில், "நாங்கள் எழுந்திருக்க வேண்டுமென யோசனைக் கூறுவதற்கு உங்களுக்கு சுயாதீனம் கொடுத்தவர் யார்?" என்று கூறுவதற்குப் பதிலாக, எந்தச் சரீர சுகவீனங்களையும் தாங்கிக் கொண்டு, நாம் எழுந்திருக்க வேண்டும். அல்லது ஓர் உதாரணத்திற்கு ஒருவர், "நாம் தலைத் தாழ்த்தி ஜெபிப்போமாக?" என்று கூறுகிறார் எனில், மற்றும் "நல்லது, நான் ஜெபிக்கும் போது நின்று கொண்டு ஜெபிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். நான் எழுந்து நிற்கப்போகிறேன்" என்று ஒருவர் சொல்லக்கூடும். மனசாட்சி சம்பந்தப்படாத அனைத்து காரியங்களுக்கும் கீழ்ப்படிய கொஞ்சம் விருப்பம் காட்டுவது நல்ல காரியமாகும். கர்த்தருடைய ஜனங்கள் நல்ல போராட்டம் பண்ணக்கூடிய திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். மேலும் இப்பண்பை நாம் பெற்றிருக்கவில்லையெனில், நாம் ஜெயங்கொண்டவர்களாக இருக்க இயலாது. ஆனால் அதை நாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவில்லையெனில், அது நம்மை சண்டைப் போடுகிறவர்களாக்கி, ஒத்திசைந்துப் போக முடியாதவர்களாக ஆக்கிவிடும். ஒவ்வொரு நியாயமான விதிமுறைகளுக்கும் கூடுமானமட்டும் நம்மையே நாம் கீழ்ப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த உரிமை மற்றும் விருப்பத்தை நிலைநாட்ட முற்பட்டால், எக்காலத்திற்கும் குழப்பமே மிஞ்சும். ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டியது ஒரு நல்ல காரியமாகும்; நம்மையே நாம் கீழ்ப்படுத்த *கற்றுக்கொள்வது* ஒரு நல்ல காரியமாகும் - ஆனால், அது நம்முடைய மனசாட்சிக்கு உட்பட்ட காரியமாக இருக்கும் பட்சத்தில், நம்முடைய மனசாட்சிக்கு விரோதமாகச் செயல்பட்டுவிடாதபடிக்கு, அந்த மனசாட்சியின்படியே நிற்பதற்குப் போதுமான தைரியமும் துணிவும் பெற்றிருக்க வேண்டும். இவ்வுலகத்தில், மனசாட்சியையே உள்ளடக்காத அநேக காரியங்கள் உண்டு.

## 28. சபை - அங்கங்களை தேவனே ஏற்படுத்துகிறார். God sets the members.

**கேள்வி (1909)-1-** 1 கொரிந்தியர் 12:28-இல், "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" என்று வாசிக்கிறோம். இதில் ஆளுநர்கள் யார்? மற்றும் எம்மட்டும் அவர்கள் ஆளுவார்கள்?

**பதில் -** ஆளுநர்கள் என்று வசனம் கூறவில்லை, மாறாக ஆளுகைக்குரிய விதி, ஒழுங்கு (அ) சட்டம் என்றே கூறுகிறது. கூடிவருபவர்கள் அனைவரும் தேவனுடைய வார்த்தையின் வழிகாட்டுதல் மூலம் கூடுகை நடத்தப்பட வேண்டிய ஒழுங்குமுறைக்கான குறிப்பிட்ட விதிமுறைகளைச் சரியாக அங்கீகரித்திருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாக இருந்து, கர்த்தருக்கேற்ற விதத்தில் எந்த ஒரு வளர்ச்சியையும் அடையக்கூடிய அனைவரும், கிறிஸ்துவின் சபையில் சில குறிப்பிட்ட விதிமுறைகள் பற்றின ஞானத்தைக் கண்டுகொள்ளக் கூடிய நிலைக்கு வர வேண்டும். சபைக்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளையும், ஒழுங்குகளையும் அங்கீகரிக்க விரும்பாத யாராயினும் ஓரளவுக்கு கலகவாதியாகவே இருக்கின்றனர். தேசம் அல்லது இந்தப் பட்டணங்களுக்கான சட்டங்களில் நாம் நம்பிக்கை வைக்கின்றோம். விதிமுறைகள் (அ) பிரமாணங்கள் இல்லாமல் இருப்பதைப்பார்க்கிலும், அவைகள் அபூரணமாய் இருந்திட்டாலும், சில விதிமுறைகளும் பிரமாணங்களும் பெற்றிருப்பதே சிறந்ததாகும். அநேக பிரமாணங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடுமென நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் கர்த்தருடைய சபை, தேவன் கொடுத்திருக்கக்கூடிய சுயாதீனத்தை நாடி, அறிந்து, உணர்ந்து பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் - ஒவ்வொன்றும் ஒழுங்குடனும், கிரமமாயும் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு சபைக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் சுயாதீனத்தைப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு சபையினுடைய நோக்கமாக இருக்க வேண்டும். ஆகையால், சபையில் ஒழுங்குமுறையை ஸ்தாபிக்கக் கூடியவர் தேவனே என்பதை நாம் உணரக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## 29. சபை - வகுப்பில் பிரச்சனை. Trouble in a class.

**கேள்வி (1910)-2-**ஒருவேளை சபையில் இரண்டு சகோதரர்களுக்கிடையே சில சிறிய கசப்புணர்வு எழும்பி, மற்றும் இதனால் அவர்கள் ஒருவரையொருவர் பேச மறுத்து மற்றும் அவர்கள் சரியான உறவுமுறையில் இல்லாதிருக்கிறார்கள் என்பது சபையிலுள்ள அனைவருக்கும் தெரியவரும் போது, அப்படிப்பட்ட தருணத்தில் மூப்பர்களின் மனநிலை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? அவர்கள் ஏதாவது ஒருவகையில் அவ்விஷயத்தை அனைவருக்கும் வெளிப்படுத்தலாமா அல்லது பொதுவான விதத்தில் அது சபையோடு விசேஷமாக தொடர்புபட வில்லையெனில், அவ்விஷயத்தை அப்படியே விட்டுவிட அனுமதித்துவிடலாமா?

**பதில் -** என்னுடைய கருத்து என்னவாக இருக்கும் என்றால் சகோதரரே, தனிப்பட்ட விதத்தில் காணப்படும் சில விஷயங்கள் உண்டு. ஆகையால் சபை அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாதிருப்பது சிறந்ததாகும். ஆனால், தேவன் சில காரியங்களில் கையாண்ட விதமாக வேதாகமம் குறிப்பிடும் விதத்தைப் பின்பற்றுங்கள். தேவன் சில விஷயங்களில் காணாதவர் போல் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். ஆகவே, சபையும் சில விஷயங்களில் காணாதவர்களாய் இருக்க வேண்டும் - அதாவது, அவைகளைக் கண்டுகொள்ளக்கூடாது. இப்பொழுது, எங்கு இரண்டு நபர்களுக்கிடையே சிறு வேறுபாடு மேலெழுகிறதோ, அதில் ஒருவேளை சபை தலையிட முற்பட்டால், அநேகமாக அது எல்லா நேரத்திலும் அக்காரியத்திலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கும். ஆனால் ஒவ்வொருவரும் உணர வேண்டியது என்னவெனில், அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது சிறந்ததாக இருக்கும் என்பதாகும். மேலும், அவர்களில் ஒருவரோ (அ) இரு தரப்பினருமேயோ பிரிவினைகளை உண்டாக்கக்கூடியவர்களாக இருந்தால், மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும். அதை அவ்வளவு அன்புடன் பாவிக்கக் கூடாது - சகோதர சகோதரிகளை ஏளனத்துடன் புறக்கணிக்கக் கூடாது. ஆனால் சபையினுடைய எந்தப் பணிக்கோ அல்லது ஊழியத்திற்கோ இவர்கள் அமர்த்தப்படக் கூடாது. மேலும், சிறிதளவு அவர்களை மிதமாகவே நடத்த வேண்டும். ஏனெனில், அவர்கள் கவனமாக நடக்காமல் சில பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள். பின்பு, மூப்பர்களில் யாரேனும் இப்படிப்பட்ட சகோதரர்களில் ஒருவரோடு தனிப்பட்ட முறையில் பேசக்கூடிய நல்ல வாய்ப்புக்கிடைத்தாகக் கண்டு, அவரிடம், "சகோதரரே, உங்கள் விஷயத்தில் நான் உதவி செய்யக்கூடிய காரியம் ஏதாகிலும் உண்டா? நீங்களும் சகோதரர் பிரவுன் (Bro. Brown) அவர்களும் சுமூகமாக இல்லாததை நான் கவனித்தேன்; சபைக்கு மூப்பர் என்ற விதத்தில் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது: மத்தேயு 18:15-ஐ மறந்துவிடக் கூடாது என்பதாகும். சகோதரர் பிரவுன் உங்களுக்கு ஏதாவது காயம் உண்டுபண்ணியிருந்தால், அவ்வசனத்தை மறந்துவிட வேண்டாம்.

மேலும், நான் எவ்விதத்திலாவது உங்களுக்கு உதவியாய் இருக்க வேண்டுமானால், நான் எந்நேரத்திலும் ஆயத்தமாய் இருப்பேன்" என்று கூறுவதும் சரியானதாக இருக்கும்.

(அதற்கு அந்நபர்) "நல்லது, அதைக்குறித்து நான் உங்களிடம் சொல்ல வேண்டும் -

(அதற்கு மூப்பர்) "இல்லை சகோதரரே, அதைக்குறித்து நீங்கள் என்னிடம் சொல்லுகிறதை நான் விரும்பவில்லை; அவ்விஷயத்தைக்குறித்து கவனித்துக் கேட்பது எனக்குத் தவறானதாக இருக்கும்; அது, வேத வசனத்தின் பிரகாரம் சரியான விதத்தில் என்னிடம் வர வேண்டும். உங்களுக்கும், சகோதரர் பிரவுனுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்குமானால், அதைக் கேட்க நான் பிரியப்படவில்லை, அதை நீங்கள் என்னிடம் கூறுவதை நான் உற்சாகப்படுத்துவது எனக்குத் தவறானதாக இருக்கும். மத்தேயு 18:15-17-இல் இயேசு கூறியது போல, தேவன் ஒரு வழியை அளித்திருக்கிறார், அதை எவ்வாறு செய்யலாம் என்பதை தேவன் நமக்குச் சொல்லியிருக்கிறார் - அதாவது, முதலில் அவரிடம் சென்று, சகோ. பிரவுனிடம் சென்று ஒப்புரவாக முயற்சிக்க வேண்டும்; அதைச் செய்ய நீங்கள் தவறினால், மேலும் அவர் உங்களைக் காயப்படுத்தி, அவரிடத்தில் ஒரு அன்பான சகோதரனாக இருக்க முடியாதளவு உணர வைத்தால், பின்பு வந்து, இரண்டு சகோதரர்களை உங்களோடுச் செல்ல அழைக்கலாம். உங்களோடு என்னை அழைத்துச் செல்ல நீங்கள் விரும்பும்பட்சத்தில், நான் உங்களுக்கு ஊழியம் செய்யவும், சமாதானத்தையும் இணக்கத்தையும் கொண்டுவரும்படிக்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்ய பிரியப்படுவேன். ஆனால், அதற்கு முன்பதாக எதையும் கேட்க நான் விரும்பவில்லை; அது சரியாக இருக்காது; நீங்கள் சொல்ல இருக்கும் எக்காரியத்தையாகிலும் நான் கவனிக்கிறவனாக இருந்தால் அது எனக்குச் சரியானதாக இருக்காது. சகோ. பிரவுன் உங்களைக் காயப்படுத்தியிருந்தால், அவரிடம் செல்லுங்கள், அதைச் செய்தும் நீங்கள் தோல்வியைக் கண்டு, இன்னும் உங்களுக்கும் அவருக்கும் இடையே மனதில் பிளவுதான் இருக்கிறது என்றால், அடுத்ததாக, வேத வசனங்கள் கூறுகிறபடி, வேறே ஒன்று அல்லது இரண்டு பேரை அழைத்துச் சென்று, அவரிடம் உரையாடலாம். மேலும், அதைக் கவனிக்கத் தவறினால் மற்றும் ஒருவேளை உங்களாலும் அவராலும் இணக்கமடைய முடியவில்லையெனில், பின்பு நீங்கள் விருப்பப்பட்டால், சபைக்கு அது கொண்டுவரப்படலாம். ஆனால், அதற்கு முன்பதாகச் செய்யப்படக் கூடாது."

## 30. சபை - சிலர் யாரையும் சார்ந்திராமல் செயல்படுதல். Some working Independently.

**கேள்வி (1916)-1-**ஒரு வட்டாரத்திலுள்ள வேத மாணவர்கள், அந்தச் சபையின் அங்கங்களாக இருந்து, ஒரு குழுவாக யாரையும் சார்ந்திராமல் செயல்படலாமா?

**பதில் -** நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட அளவு கிறிஸ்தவ சுயாதீனம் உள்ளது, அதில், ஜனங்கள் எப்பொழுதுமே பயிற்றுவித்துக் கொண்டிருப்பதில் கர்த்தர் பிரியமுள்ளவராக இருப்பார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். உதாரணத்திற்கு, ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனுடைய இல்லத்திற்குச் செல்ல யோசிக்கிறார், அப்பொழுது இரண்டு மூன்று அயலகத்தார் அந்த சாயங்கால வேளையை கழிப்பதற்கு உள்ளே வந்தார்கள். அப்பொழுது ஒருவர், "நாம் சதுரங்க ஆட்டம் விளையாடலாம் என்று கூற யோசிக்கிறார். மற்றொருவரோ, "இல்லை, நாம் ஒரு வேத ஆராய்ச்சி செய்யலாம்" என்று கூறுகிறார். "இல்லை, நாம் வேத ஆராய்ச்சி செய்ய முடியாது, ஏனெனில் நம்முடைய சபையாரால் இதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை, ஆகையால் நாம் சதுரங்க ஆட்டம் விளையாடலாம்" என்று கூறுவது கர்த்தருடைய சித்தமாக இருக்கும் என நாம் நினைக்கக் கூடாது. நாம் அதைச் சரியாக நிதானிக்க வேண்டும், சபையால் எவ்வித கூடுகைக்கான ஏற்பாடும் செய்யப்படாதிருக்கும் போது, வேத ஆராய்ச்சி செய்வதற்கோ அல்லது வேதத்தின் அடிப்படையிலான உரையாடலுக்கோ எவ்வித தடையும் இருக்கக்கூடாது. "அடுத்த வாரம் மற்றொரு கூடுகைக்காக இன்னும் அதிக அயலகத்தார் வருவதற்கு நாம் கேட்டுப்பார்க்கலாம். இக்காரியங்கள் குறித்து அவர்களுக்குச் சொல்ல நான் முயற்சித்திருக்கிறேன், ஆகையால் உங்களுக்குச் செவிகொடுக்க அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்" என்று அங்கு வந்தவர்கள் கூறலாம். இக்காரியத்தில் எவ்வித தவறும் இருக்கும் என நான் காணவில்லை. அவ்வாறு

கலந்துகொள்பவர்கள் ஒரு தொடர்ச்சியான கூடுகையை விரும்பினால், அது வழிநடத்துபவர்களை அமைத்துக்கொடுக்க I. B. S. A. -இன் தனிப்பட்ட சபைக்குத் திருப்பிவிடப்பட வேண்டும்.

இப்பொழுது, ஒரு சபையில் சிலர், "நாங்கள் மற்றொரு தொடர்ச்சியான கூடுகையை ஆரம்பிக்கப் போகிறோம்" என்று கூறுகிறார்கள் என வைத்துக்கொள்ளுங்கள், இது முற்றிலும் வேறுபட்ட காரியமாக இருக்கும். ஒரு புது சபையை உருவாக்க அவர்கள் உரிமை பெற்றிருக்கின்றனர், ஆனால் அவ்வாறு செய்வதினால் அவர்கள் காணப்பட்ட சபையிலிருந்து அவர்கள் பிரிந்து செல்லக்கூடியவர்களாக இருப்பார்கள். அதன்பிறகு அவர்கள் மற்ற கூடுகைக்குச் சரியாகத் திரும்பவும் சென்று, "இங்கு நாங்கள் வாக்களிப்போம்" என்று கூற முடியாது. நாம் செய்யக்கூடிய காரியத்தில் நிலையான தன்மை காணப்பட வேண்டும். ஒரு சபையின் அங்கத்தினராக மாறினவர்கள், ஒத்துழைப்பின் நன்மைகளை தாங்கள் பெறத்தக்கதாக, தங்களுடைய தனிப்பட்ட சுயாதீனங்களை விட்டுக்கொடுப்பவர்களாய் இருப்பார்கள். ஆனால் இது, நாம் வேத ஆராய்ச்சி செய்யக்கூடாது, அதற்குப் பதிலாக சாயங்காலத்தைக் கழிக்க விளையாட்டுகள் விளையாடலாம் என்பது போன்ற கட்டுப்பாடாக அர்த்தப்படாது.

## 31. தேர்தல் (Election) - வர இயலாதிருக்கும் அங்கங்கள் கடிதம் மூலம் வாக்குப்பதிவு செய்தல். Absent members voting by letter.

**கேள்வி (1912)-2-**இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னரே தேர்தலுக்கான முன்மொழிதல் இடம்பெற்றிருக்க, கைகளை உயர்த்துவதன் மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, வகுப்பின் இரண்டு (அ) மூன்று அங்கங்கள், நேரில் வர இயலாதிருக்கும் தருவாயில், தங்கள் வாக்குப்பதிவை அவைத்தலைவருக்கு கடிதத்தின் மூலம் அனுப்புவது அனுமதிக்கத்தகுந்ததா?

**பதில் -** இதில் மறுப்புக்கிடமானது ஒன்றுமே இல்லை. அரசியலில், ஒரு கட்சி மற்ற கட்சிக்கு எதிராக சூழலை சாதகமாக்கிக் கொள்ளுகிற கட்சி மனப்பான்மை காணப்படுகிறது. எனினும், இது உங்களிடத்தில் இருக்கலாகாது. மூப்பருக்கான தேர்தலை நீங்கள் சந்திக்கும்போது, ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியும் வெளிப்படையாகத் தெரிவிக்கக்கூடிய முழுமையான வாய்ப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளைத் தெரிவிக்க வேண்டுமென விருப்பம் மாத்திரம் கொள்கிறவர்களாக இராமல், அதை அனைவரும் எப்படியாயினும் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். நமக்கு அவர்களுடைய சொந்தக் கருத்து மட்டுமே அவசியமானது அல்ல, மாறாக சபைக்கான தேவனுடைய சித்தம் இன்னது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்விஷயத்தில், தேவனுடைய சித்தமாக இருக்குமென நாம் நினைப்பது எதுவோ அதை நாம் அனைவரும் வெளிப்படுத்துவோமாக. வர இயலாதிருப்பவர்கள், கூடுகையின் அவைத்தலைவரிடத்தில் தங்களின் வாக்குப்பதிவை அனுப்பிவைப்பதற்கு எந்தத் தடையும் இருப்பதாக நான் காணவில்லை. நீங்கள் வந்திருப்பீர்களேயானால், நீங்கள் எண்ணியிருப்பவருக்கு உங்கள் வாக்குப்பதிவைக்கொடுக்கலாம். ஆனால் உங்களுக்காக பதிலாள் வாக்குரிமையாக, வேறொரு சகோதரன் அல்லது சகோதரி, தாங்கள் சிறந்தவர்கள் என்று கருதக்கூடியவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்படலாகாது. இவ்விஷயத்தில், அதுவே என் கருத்தாகும்.

## 32. தேர்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல். Election – Choosing Elders and Deacons.

**கேள்வி (1913-Z)-2-**குறைவான பெரும்பான்மை என்பது தேர்தலின் விதியாக இருக்கமுடியுமா? Should a bare majority rule in our elections?

**பதில் -** ஆறாம் தொகுப்பில் சொல்லப்பட்ட மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சில சகோதரர்களுக்கு சிக்கல் இருப்பதாக அநேக கேள்விகள் வந்துள்ளது.

இந்தத் தலைப்பைப்பற்றி ஒரு மாறாத கட்டளையைக் கொண்டு வரவேண்டும் என்பது நமது நோக்கம் அல்ல. வேதாகமத்தில் இப்படிப்பட்ட ஒரு கட்டளை எங்கும் சொல்லப்படவில்லை மற்றும் இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர யாருக்கும் அதிகாரம் இல்லை. நமது ஆலோசனை என்னவெனில் தேர்தல் ஒருமித்ததாக நடத்தப்பட வேண்டும். எழுபத்தைந்து சதவீதத்தினர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் ஒரு சகோதரனின் தேர்விற்கு ஆதரவு தெரிவிக்காவிடில், அவர் அந்தப் பொறுப்புக்கு - ஊழியத்திற்கு வருவது என்பது விவேகமில்லாத செயலாகும். இதனால் இருபத்தைந்து அல்லது முப்பது சதவீதத்தினர் தேர்தலைத் தடை செய்யவோ அல்லது இடையூறு உண்டாக்கவோ ஊக்குவிக்கப்படலாம் என்பது அர்த்தமல்ல.

மற்றவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, அன்பானது உந்தும் விஷயங்களைத் தவிர சபையில் பெரும்பான்மையினரே ஒரு காரியத்தை முடிவு செய்ய வேண்டுமென்பதை கண்டிப்பாகக் கூறவேண்டும். உதாரணமாக, 100 பேர் கொண்ட சபையில் 51 பேர் சபையின் ஊழியக்காரர்களை முடிவு செய்ய அதிகாரம் பெற்றுள்ளனர், மீதம் இருக்கக்கூடிய 49 பேரும் இதை எதிர்ப்பின்றி அமைதலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தாங்கள் சிறுபான்மையினர் என்பதை உணர்ந்துகொண்டு பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு தங்களின் உண்மையான ஆதரவைக் காட்ட முயலவேண்டும்.

அன்பின் ஆவி மற்றும் சபை ஜனங்களின் நலன்களைக் கருத்தில் கொள்வதால் மாத்திரமே 51 சதவீதத்துக்கும் அதிகமான முடிவு எட்டப்படும். அன்பானது ஒருமித்த தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். இதை எப்படிப் பெறலாம் என்பதற்கு நாம் ஒரு ஆலோசனை வைக்கிறோம்.

ஒரு 100 எண்ணிக்கை அடங்கிய சபையின் ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் அவசியம் தேவைப்படலாம். அதிக அல்லது குறைந்த திறனையுடைய A, B, C, D, E, F என்கின்ற நபர்கள் இருக்கலாம். A 100 வாக்குகள் பெற்றிருக்கலாம்; B -க்கு 90; C-க்கு 80; D-க்கு 70; E-க்கு 60; F-க்கு 50. ஆனால், சரியான வாக்குப் பதிவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் நிலையில், 90 விழுக்காடு என்ற அடிப்படையில், இரண்டு பேர் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர். ஆனால் நமது கருத்தானது, நன்நடத்தையின் குணங்களின் கண்ணியத்தைக் குலைக்கக்கூடிய எந்த ஒரு காரியங்களும் காணப்படாமல், சபையால் ஏற்றுக்கொண்ட சராசரியான நல்லதொரு நபராக அவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒட்டுமொத்த ஆறு பேரும் ஒருமித்தக் கருத்தோடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

அப்போஸ்தலர் பவுலினால் நிலைநாட்டப்பட்ட சட்டங்கள் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்வது தவறு என்பதை சிந்திக்க வேண்டும். காரணம், அத்தகுதிகள் அனைத்தும் நிறைவாகப் பெற்றிருக்கக்கூடிய ஒருவர் காணப்பட இயலாது. ஒரு சிறந்த மூப்பர் எப்படியிருக்க வேண்டுமென அப்போஸ்தலர் குறிப்பிட்டிருக்கிறார். கர்த்தருடைய சித்தத்தைச் சிந்திக்கும் வாக்காளர் ஒவ்வொருவரும் இச்சிறப்பம்சங்களை தங்கள் மனதில் முன்னிறுத்த வேண்டும். ஆனாலும், கடுமையான குற்றங்கள் இல்லாதபட்சத்தில் சபையானது மூப்பர் இல்லாமல் விடப்படக்கூடாது.

நமது கர்த்தரும் இதுபோன்ற நிறைவான சட்டங்களை நமக்கு முன்பாக வைத்துக் கூறுவதாவது: "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத்தேயு 5:48). பூரணமுள்ள தேவனின் பார்வையில் யார் பூரணர்? "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10). கர்த்தர் தெளிவாக அர்த்தப்படுத்துவதாவது, நம்மை நாம் ஒரு குறைந்த நிலைக்கு அல்ல, பூரண நிலைக்கே அளவிட வேண்டும். இவ்விதம், நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் நமது பண்புகளிலும் மற்றும் தெரிவு செய்யப்படும் மூப்பர்களுக்கும் மந்தைக்கு மாதிரியாகவும் நம்மை இந்தப் பிரமாண்டமான நிலைக்குக் கொண்டுச் செல்லவும் உதவி செய்கிறது.

## 33. கூட்டங்கள் (MEETINGS)—மூப்பர்கள் அல்லாமல், மற்றவர்கள் கூட்டங்களைத் தலைமைத் தாங்கி நடத்துதல் (Re Others Than Elders Leading Meetings). (pg. 473)

**கேள்வி (1910)-1**-சபையில் மூப்பர்கள் அல்லாத வேறே சகோதரர்கள் தலைமைத் தாங்கி கொஞ்சம் நடத்துவதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

**பதில்**—சபையே இதைத் தீர்மானித்திட வேண்டும். இக்காரியம் சபையினிடத்திற்கே விட்டுவிடப்பட வேண்டும். ஒருவேளை சபைதான் ஒரு மூப்பரைத் தெரிந்துகொண்டுள்ளதென்றால், அப்பொழுது அது சபையினுடைய பொறுப்பாகின்றது; அதாவது மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களென வேறு எவரையும் சபை கண்டுபிடிக்கவில்லை என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் மூப்பனாரோ தனக்குச் சபையாரைக் காட்டிலும் நன்கு தெரியும் என்று கூறி, யாரையாகிலும் நியமிப்பது என்பது, சபையின் கணிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாக இருந்துவிடும், ஏனெனில் மூப்பருக்கான தகுதியுடையவர்களென (வேறு) எவரும் இருப்பதாகக் கண்டுபிடிக்கவில்லையென்றே சபை கூறியுள்ளது. அந்த ஒரு மூப்பரை மாத்திரம் தேர்ந்தெடுத்தபோது, சபை இப்படியாகக் கூறியிருந்தது. ஆனால் சபையானது, நாங்கள் ஒரு மூப்பரை மாத்திரமே தேர்ந்தெடுப்போம், ஆனால் அந்த மூப்பனார் தனது கணிப்பைப் பயன்படுத்தி, சபையிலிருந்து மற்றச் சில சகோதரர்களை முன் கொண்டுவருவதற்கும் அவர்களைப் பல்வேறுவிதங்களில் பயன்படுத்துவதற்கும் (அ) தங்கள் தங்கள் திறமைக்கு ஏற்ப ஊழியம் புரிந்திடுவதற்கு அழைப்பதற்கும் நாங்கள் விரும்புகின்றோம் என்று கூறியிருந்ததானால், இத்தகைய ஒரு பொறுப்பை, சபையே அந்த மூப்பனாருக்குக் கொடுத்தவர்களாய் இருக்கின்றார்கள் மற்றும் சபை தனக்குக்கொடுத்துள்ளதை மாத்திரமே அந்த மூப்பனார் பயன்படுத்தலாம் மற்றும் இதற்கு மேலாக எதையும் செய்யக்கூடாது. இம்மாதிரியான சூழ்நிலையில் சபையார் மற்றவர்களை உதவிக்காரர்களாய்த் தெரிந்துகொண்டு, சபையின் மூப்பரை நோக்கி, உங்களால் முடிந்தமட்டும் இந்த உதவிக்காரர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்பதாக தயவுகூர்ந்து கருதுங்கள், ஏனெனில் இவர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படுவதற்கும், ஒருவேளை போகப்போக சபையின் சில முக்கியமான ஊழியங்களுக்குக் கொண்டுவரப்படுவதற்குமென சில தகுதிகள் இவர்களிடத்தில் காணப்படுவதை எங்களால் பார்க்க முடிகின்றதாக நாங்கள் எண்ணியே இவர்களை உதவிக்காரர்களாக தேர்ந்தெடுத்தோம் என்று கூறவேண்டும். உதவிக்காரருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்பவர்கள், தங்களுக்கு நல்ல நிலையைச் சம்பாதித்துக்கொள்கின்றார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார்; அதாவது உதவிக்காரர்களென அல்லது உணவின் விஷயத்திலோ (அ) வேறு ஏதாகிலும் விஷயத்திலோ விசாரிப்பதிலும், சேவிப்பதிலும் ஊழியர்களென உண்மையாய் இருப்பதன் மூலம் இவர்கள் சபைக்கடுத்த ஊழியம் புரிவதற்குரிய சரியான ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாகவும், இன்னும் மற்ற ஊழியங்களுக்காகப் பொறுப்பும் தங்களிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படலாம் என்பதையும் வெளிப்படுத்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பழங்களையோ (அ) பாலையோ அல்லது வேறு ஏதாகிலும் உணவையோ பறிமாறுவதன் மூலம், சபையாருக்கு ஊழியம் புரிந்திட ஓர் உதவிக்காரர் வெட்கப்படுவாரானால், அவன் உதவிக்காராய் இருப்பதற்குத் தகுதியற்றவர் மற்றும் மூப்பராய் இருப்பதற்கு ஆபத்தானவராகவும் இருப்பார்.

## 34. கூட்டங்கள் (MEETINGS)—மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகள் (Duties of Elders and Deacons). (pg. 480)

**கேள்வி (1916)-1**-அதிகம் எண்ணிக்கையுள்ள சபையில், மூப்பர்கள் ஊழியத்தில் முழுமையாய் ஈடுபட்டிருக்க மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும் கூடத் தங்கள் வாய்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய் ஊழியஞ்செய்துகொண்டிருக்க, (அதே சபையில்) வழிநடத்துகிறவர்கள் இல்லாமல் ஒரு கூடுகையானது இன்னமும் காணப்படுகிறதென்றால், மூன்று மூப்பர்கள் அடங்கின அச்சபையின் வழிநடத்துபவர்கள் அடங்கின குழுவானது, சத்தியத்தில் தெளிவானவராகவும், வழிநடத்துபவராகச் செயல்படுவதற்குத் தகுதியுடையவராக குழுவின் அங்கத்தினரால் அறியப்பட்டிருக்கும் ஒரு சகோதரனை, சபையார் மத்தியிலிருந்து, துணை ஊழியனாக (assistant) நியமிப்பது சரியாக இருக்குமா?

**பதில்**—இம்மாதிரியான சூழ்நிலையின் கீழ் இப்படிச் செய்வது சரியானதாகக் காணப்படும் என்று நான் எண்ண வேண்டியவனாய் இருக்கின்றேன். கூடுகைகளை வழிநடத்துவதற்குத் தகுதியுடைய மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையார் முடிவு பண்ணுவது சரியான காரியமாய் இருக்கும். எனினும் போதுமானவர்கள் இல்லையெனில் குழுவானது, அச்சூழ்நிலைக்குத் தகுதியானவர் என்று கருதும் யாரையேனும் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும். எனினும் அவசரமான சூழ்நிலைகளைத் தவிர, மற்றபடி சபையார் நிர்ணயித்த எண்ணிக்கையை அவர்கள் தாண்டிவிடக்கூடாது. சாதாரணமானச் சூழ்நிலைகளில் நியமிக்கப்பட்ட மூப்பர்களே கூட்டங்கள் அனைத்தையும் தலைமைத் தாங்கி நடத்திட வேண்டும்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் தகுதியுடைய உதவிக்காரர் ஒருவர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அவசரமான சந்தர்ப்பத்தின்போது, வழிநடத்துவதற்கு நியமிக்கப்படலாம். ஆனால் தகுதிவாய்ந்த மூப்பர்களின் எண்ணிக்கையை சபையாரே நியமித்திட வேண்டும் என்பதும், சாதாரணமான சந்தர்ப்பங்களில் மூப்பர்களே கூடுகைகளை ஒழுங்குப்படுத்திட வேண்டும் என்பதும் நன்கு மனதில் நினைவுகொள்ளப்பட வேண்டும். அவசரமான சந்தர்ப்பங்களே ஒழிய மற்றப்படி மூப்பர்களே செய்திட வேண்டும்.